ஒவ்வொரு வருடமும் பன்னிரண்டாம் வகுப்பு தேர்வு முடிவுகள் வெளியான பிறகு அடுத்த ஒரு மாதத்திற்கு தகுதியான மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படும் முகவரியின் முன்னாள் மாணவர்கள் கொண்ட ஒரு அணி அமைக்கப்பட்டு அந்த அணியானது விண்ணப்பங்களை பரிசீலனை செய்யும் விண்ணப்பம் செய்தவர்கள் கொடுத்த தகவல்கள் சரி பார்க்கப்பட்டு அவர்களின் தேர்வை முன்னாள் மாணவர்கள் கொண்ட இந்த அணியே முடிவு செய்யும். ஒவ்வொரு வருடமும் இந்த அணி புதிதாக உருவாக்கப்படும் பொருளாதாரத்தில் பின்தங்கிய, அரசு கல்வி நிறுவனங்களில் உயர் கல்வி பயில இடம் கிடைக்கப் பெற்ற அர்பணிப்பு உணர்வு உள்ள மாணவர்களே தகுதியுள்ள மாணவர்களாக கருதப்படுவர்.

அதிலும் கீழ்க்கண்ட இந்த 3 பிரிவினருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

1. காப்பகம் அனாதை இல்லங்களில் இருந்து வரும் மாணவர்கள்.
2. பெற்றோரை இழந்த மாணவர்கள், மாற்று திறனாளர்கள்.
3. பன்னிரண்டாம் வகுப்பு வரை அரசு பள்ளியிலே பயின்ற மாணவர்கள்.

ஒவ்வொருவருடமும் முகவரிக்கு தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை அந்த ஆண்டு முகவரிக்கு உதவ முன்வந்துள்ள புரவலர்களின் எண்ணிக்கையை பொறுத்தே அமையும்.

இந்த முறைப்படி தேர்வு செய்யும் போது தகுதியான மாணவர்கள் தேர்ந்தெடுக்கப் படுவதோடு, தேர்வு முறையும் முறைப்படுத்தப்பட்ட ஒன்றாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.



2012–ம் ஆண்டு
பூபதிராஜா
தலைமையிலான
புதிய தேர்வுக் குழு
.



2013–ம் ஆண்டு
புதிய மாணவர்களுக்கான
தேர்வுக்குழு மாணவ,
மாணவிகள்.



2013–ம் ஆண்டு
சதிஸ்குமார் தலைமையிலான
தேர்வுக் குழு



2013–ம் ஆண்டு
மணிமுத்து தலைமையிலான
தேர்வுக்குழு



2013–ம் ஆண்டு
அருண்ராஜ் தலைமையிலான
தேர்வுக்குழு



2013–ம் ஆண்டு
ராஜீவ்காந்தி தலைமையிலான
தேர்வுக்குழு

மனிதத்தன்மை முழுமையாக உங்களிடம் பிரகாசித்தால், நன்னடத்தை பற்றிய போதனைகள் தேவைப்படாது. கொள்கைகளை விட்டெறியுங்கள். விழிப்பு உணர்வுடன் வாழுங்கள்!

- சத்குரு

भारत सरकार
GOVERNMENT OF INDIA
वित्त मंत्रालय
MINISTRY OF FINANCE
आयकर विभाग
INCOME TAX DEPARTMENT

सत्यमेव जयते



Office of the Deputy Commissioner of Income Tax,
Aayakar Bhavan, New Block, 121, Mahathma Gandhi Road,
Nungambakkam, Chennai 600 034.

26-08-2013

Mr.Ramesh, through Mugavari Foundation taking genuine and valuable efforts to identify the students who deserves education in various field. Mugavari Foundation's commendable efforts started yielding results because the students who benefited out of Mugavari Foundation started reciprocating by their tireless efforts to Mugavari foundation, empathizes everyone who got associated with them. This organization goes in a right track with everlasting purpose for the next generation.

I wish Mr.Ramesh, all the students and members who are associated with Mugavari Foundation for their future endeavors

V. NANDAKUMAR I.R.S.
DEPUTY COMMISSIONER OF INCOME-TAX
CHENNAI-34

உங்களைச் சுற்றிலுமுள்ள உயிர்களிடம் ஈடுபாடு கொள்ளுங்கள், அதுவே போதுமானது.
பிறக்காதவர்களுடனும் இறந்தவர்களுடனும் எந்தத் தொடர்பும் வேண்டியதில்லை!

- சத்குரு

Office of Dr. APJ Abdul Kalam
Former President of India

24-ஆகஸ்ட்-13



"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம்பதி னாயிரம் நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்"

என்ற பாரதியின் புரட்சிக் கவிதைக்கு தனது இலட்சியத்தால், உழைப்பால், மிக உயர்ந்த நோக்கத்தால் உயிர் கொடுத்துக்கொண்டிருக்கும் முகவரி பவுண்டேசனுக்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்.

2002ம் ஆண்டு முதல் முகவரி பவுன்டேசனை தொடங்கி, ஏழை மாணவர்களின் கல்வி ஆர்வத்தை ஊக்கப்படுத்தி, அவர்கள் மேற்கல்வியை தொடர தொடர்ந்து உதவி செய்து இன்றைக்கு 200 மாணவர்களை மேற்படிப்பை தொடர்ந்து கொண்டிருப்பது ஒன்றே ஓர் உன்னத சாட்சி, அந்த மாணவர்களின் 25 பேர் சிவில் சர்வீஸஸ் தேர்வுக்கு தயார் செய்து அவர்களில் ஒருவர் UPSC 2012 தேர்வு பெற்று இன்றைக்கு IRTS Lucknow வில் பயிற்சி பெற்று வருகிறார், 5 மாணவர்கள் TNPSC Group II Services, 1 மாணவி TNPSC Group 1 Service தேர்வு பெற்று இருக்கிறார்கள் என்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். நீங்கள் சரியான பாதையில் செல்கிறீர்கள் என்று உணர்கிறேன், அதுமட்டுமல்லாமல் ஆராத்தி அக்ரகாரம் என்ற கிராமத்தில் இருந்து மட்டும 5 மாணவர்களை Ph.D ஆராய்ச்சி செய்வதற்கு உதவி, 21 மாணவர்கள் அரசு மருத்துவ கல்லூரிகளில் MBBS படிப்பதற்கு உதவி, 17 மாணவர்கள் அண்ணா பல்கலைக்கழகத்தில் பொறியியல் கல்வி படிப்பதற்கு உதவி, அதுமட்டுமல்லாமல், இந்த மாணவர்களுககு யோகா பயிற்சியும் அளித்து அவர்கள் உடல் நலத்திலும், மனநலத்திலும் சிறந்து விளங்க ஏற்பாடு செய்து வருகிறீர்கள். ஒவ்வொரு மாணவர்களுக்கும், உதவி செய்யும் மனப்பான்மை கொண்டவர்களிடம் உதவி பெற்று ஏழை மாணவர்களின் கனவை நனவாக்க உதவி செய்வதோடு மட்டுமல்லாமல், அந்த ஏழை மாணவர்கள் வாழ்வில் உயர்ந்த நிலைக்கு அடைந்த உடன், அவர்கள் மற்ற ஏழை மாணவர்களுக்கு உதவ வேண்டும் என்ற உயர்ந்த இலட்சிய விதையை விதைத்திருக்கிறீர்கள்.

உங்கள் உயர்ந்த இலட்சியம் செழித்து வளர்ந்து. ஆயிரக்கணக்கான மாணவர்கள் பயன்பெற வாழ்த்துகிறேன்.

Yours sincerely

10, Rajaji Marg, New Delhi – 110 011, India
Email: apj@abdulkalam.com
www.abdulkalam.com

இரைச்சல் மிகுந்த சந்தைக்கு நடுவிலும் அமைதியாயிருக்க முடிந்தால்தான்,
அந்த அமைதி உங்களுடையது என்று அர்த்தம்.
- சத்குரு

# ANNA UNIVERSITY

CHENNAI - 600 025

College of Engineering Guindy Campus

Department of Mechanical Engineering

☎ : 044-2235 9496
☎ : 044-2235 7744
✆ : 044-2445 3992
: +91-94441 18628
: karun@annauniv.edu
hodmech@annauniv.edu

## Dr. L.KARUNAMOORTHY

Professor and Head




August 15, 2013

"We make a living by what we get. We make a life by what we give". I see these lines bought to life by Mr.K.Ramesh, who runs the MUGAVARI FOUNDATION, in a very admirable way. Seventeen students from Mugavari are studying in CEG, MIT and AC Tech campuses, out of which three have completed their courses and are pursuing higher education in other institutions. I am very much intrigued by the number of students who have the vision to be a part of the civil service and by the number of students who have successfully cleared the exams. Another unique aspect that sets Mugavari apart from other organizations is the number of students who have benefited from Mugavari Foundation come forward to help new aspiring entrants in the group, which is a very healthy way in moving forward.

I sincerely hope and wish that Mugavari Foundation spreads in branches and reaches out to many more students. "No one has ever become poor by giving". True to this saying, I appeal to all such people to come forward and provide support in any form that would help the organization in good stead.

I wish Mr.K.Ramesh, all the very best and success in all future efforts.

(L.KARUNAMOORTHY)


Res : PII/1, Staff Quarters, Anna University, Chennai - 600 025.


மற்றவர்களுக்காகப் பொறுப்பேற்றுக் கொள்வதுதான் அன்பின் அடையாளம்.
அது ஓர் அற்புதமான அனுபவம்.

\- சத்குரு

**A.R. Murugadoss**
Film Director

44/1, Navanithammal Street,
Saligaramam, Chennai – 600 093.
(044) 42647532



நாள் : 26.08.2013

பதினோரு வருடங்களுக்கு முன்பு +2 வகுப்பில் நல்ல மதிப்பெண்கள் பெற்று மருத்துவ நுழைவுத் தேர்வில் மாநில அளவில் மூன்றாம் இடம் பெற்ற மாணவிக்கு மருத்துவ கல்லூரியில் இடம் கிடைத்துள்ளது. அம் மாணவியின் கல்லூரி படிப்பிற்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார் ரமேஷ்.

அவ்வாறு அறிமுகமான ரமேஷை மூன்று ஆண்டுகளுக்கு முன்பு சந்திக்க நேர்ந்த போதுதான் தெரிந்தது அந்த ஒரு மாணவியுடன் நிறுத்திவிடாமல், அவர் “முகவரி” என்ற பவுண்டேசனை உருவாக்கி அதன் மூலம் நிறைய மாணவ, மாணவியர்களின் உயர்கல்விக்கு உதவி அளித்து வருவது தெரிய வந்தது. இன்று முகவரியின் மூலம் 200 க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

ஆர்வமுள்ள பலரை தேடிச்சென்று அவர்களிடம் உதவிப்பெற்று மாணவ, மாணவியர்களுக்கும் உதவி செய்பவர்களுக்கும் இடையே ஒரு பாலம் போல் முகவரி இருக்கிறது என்பது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. தொடர்ந்து 11 ஆண்டுகளாக எந்த ஒரு சூழ்நிலையிலும் இப்பணியினை விட்டுவிடாமல், நல்ல படிப்பறிவு உள்ள ஏழ்மையான மாணவ, மாணவியர்களுக்கு “முகவரி ரமேஷ்” உயர்கல்வி என்ற நல்ல முகவரியை கொடுத்துக் கொண்டிருக்கிறார். இதில் படித்து வேலைக்கு சென்ற மாணவர்கள் மீண்டும் இந்த முகவரி பவுண்டேசனுக்காக வானவில் திட்டத்தின் மூலம் தன்னார்வத் தொண்டு செய்கிறார்கள் என்பதை நினைக்கும் போது பெருமையாக இருக்கிறது.

இன்னும் அதிக நபர்கள், முகவரியில் பங்கெடுத்து உதவ முன்வர வேண்டும். இதில் என்னால் முடிந்த உதவிகளை செய்து கொண்டிருக்கிறேன். இனியும் தொடர்ந்து செய்வேன் . . .

A.R. Murugadoss

சூழ்நிலைகளின் தாக்கத்தில் வாழ்வது விலங்கின் தன்மை. மனிதரின் தன்மை, சூழ்நிலைகளை உருவாக்குவது!
- சத்குரு

# முகவரியின் தூண்களுடன் விழுதுகள்



திரைப்பட இயக்குனர் A.R. முருகதாஸ்



சென்னை மாநகராட்சி மேயர் சைதை துரைசாமி



SRM பல்கலைகழக வேந்தர் Dr.T.R பச்சமுத்து



சூரியன் ஃபார்மாக்யூட்டிகல்ஸ் நிர்வாக இயக்குனர்,
R. கிருஷ்ணமூர்த்தி மற்றும் கௌரி கிருஷ்ணமூர்த்தி



சேலம் பாலாஜி ரப்பர் குரூப்ஸ் சேர்மன் K. வைத்தியலிங்கம்



லேனா ஸ்டீல்ஸ் சேர்மன் D. லட்சுமணன்.

அமைதி என்பது வாழ்வில் இறுதியாக அடைவது அல்ல.
வாழ்வின் அடித்தளமே அதுதான். அது மனிதர்களின் பிறப்புரிமை!

\- சத்குரு

# முகவரியின் தூண்களுடன் விழுதுகள்



டெக்ஸாஸ் டெக் நிர்வாக இயக்குனர். S. துரை



பெருந்துறை உலகநாதன், TCP மெமோரியல் ட்ரஸ்ட்



வினோத் பில்டர்ஸ் சேர்மன் R. பாண்டுரங்கன்



அகேசியா பில்டர்ஸ் சேர்மன் மோகனவேல் மற்றும் சங்கீதா மோகனவேல்




இந்திரா பவுண்டேஷன் சேர்மன் V.G. இராஜேந்திரன்



ரோகிணி ஸ்டீல்ஸ் நிர்வாக இயக்குனர் V. பாலமுருகன் மற்றும் சுசீந்தரா பாலமுருகன்.

. நம்பிக்கை எதுவுமில்லாமல் ஒருவன் இருக்கிறான் என்றால் அவன் உண்மையிலேயே ஆசிர்வாதம் பெற்றவன். ஏனெனில், அவனிடம் தோல்வி பற்றிய பயம் கிடையாது!

- சத்குரு

# முகவரியின் தூண்களுடன் விழுதுகள்



அண்ணா பல்கலை கழக பேராசிரியர் லலிதா
(1982– Anna University CEG Students batch)



ஸ்மார்ட் லீடர்ஸ் ஐஏஎஸ் அகாடமி இயக்குநர் சிவராஜ்வேல்



சேலம் ஊர்வசி டெக்ஸ்டைல்ஸ் நிர்வாக இயக்குநர் பத்ரிநாராயணன்




தாகூர் கல்வி நிறுவனங்கள் சேர்மன் விஜயகுமார்



ஸ்ரீ காயத்திரி ட்ரஸ்ட், ராகவன்



ஆனந்தம் பவுண்டேஷன் செல்வகுமார்.

உங்களுடைய துன்பங்களின் ஒரே காரணம், வாழ்க்கை நீங்கள் நினைப்பதுபோல நடக்காததுதான்!
- சத்குரு

# முகவரியின் தூண்களுடன் விழுதுகள்



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், தேவதாஸ்.



கோல்ட் ஹார்ட் பவுண்டேஷன்.
ஸ்ரீப்ரியா & முகமது தௌபீக்



ரிச் இண்டியா குரூப்ஸ் சேர்மன், அருளானந்து



Er K. விக்னேஷ் (ரானே வால்யூஸ் நிறுவனம்)



எம் கனி & கோ சேர்மன், ஜாகிர் ஹீசேன்



அன்டைட்டில்ட் ஆர்கனைஸேஷன்,
ஷாம்பொன்ராஜ் & பாலாஜி பிரேம்குமார்

செல்லும் பாதையே சேரும் இடமாகும். ஒவ்வொரு படைப்பிலும் படைத்தவன் மறைந்திருப்பதைப் போல பாதையிலேயே இலக்கும் மறைந்துள்ளது!

\- சத்குரு

# முகவரியின் தூண்களுடன் விழுதுகள்



ராமய்ய அரியா, சாப்ட்வேர் இன்ஜினியர்



சாந்திக்குமார், இயக்குநர் தேஜா ஸ்ரீ டெவலப்பர்ஸ்



ஸ்ரீஹரா ரெஸ்ட்ராண்ட், இராதாகிருஷ்ணமூர்த்தி



தொழிலதிபர் வேலுச்சாமி



Dr. அகிலா (SRM மருத்துவ பல்கலைக்கழக விரிவுரையாளர்)




டர்னிங் பாய்ண்ட் ஸ்டடி சர்க்கில் மதன் குமார்.

ஒவ்வொரு சுவாசத்திலும் இருக்கிற படைத்தவனையும், படைப்பின் பல பரிமாணங்களையும் புரிந்து கொள்ளத் தவறிவிட்டு, மனதில் தேவையற்ற விஷயங்களுக்கு அதிக இடம் கொடுத்து, நேரத்தை வீணடிக்கிறீர்கள்!

- சத்குரு

# முகவரியின் தூண்களுடன் விழுதுகள்



பீஸ் & ஹேப்பினஸ் மகேஷ்



திருமதி மங்கை கோபிநாத்



தீபம் பாலகிருஷ்ணன்

## ஏன் யோகா?

ஒரு காட்டிற்கு மரம் வெட்ட இரண்டு விறகுவெட்டிகள் செல்கின்றனர். வலிமையில் இருவரும் சமமானவர்களே, இருவரும் ஒரே நேரத்தில் மரம் வெட்ட தொடங்குகின்றனர். வேலை முடிந்து மாலையில் பார்க்கும் போது, முதல் விறகு வெட்டி, இரண்டாவது விறகு வெட்டியை விட கூடுதலாக வெட்டி இருந்தார். அது எப்படி என்று பார்த்தால், முதல் விறகு வெட்டி இடை இடையே சிறிது ஓய்வு எடுத்து கோடரியை கூர் தீட்டி வெட்டினார். அப்படி தான் மாணவர்களும், திறமைகள் நிறைய பெற்று இருந்தாலும், அவர்களை செம்மைபடுத்துவது அவசியம் ஆகும். அப்படி மாணவர்களை செம்மைபடுத்த யோகா ஒரு சிறந்த கருவியாகும்.

## தாயுள்ளம்

விதையுனுள் ஒரு மரம்
விருட்சம் பெற்று உயிர்த்து எழும்.
லட்சியத் தேடலில் நாடி வரும்
உறவுகளுக்கு - அதன்
முதல் வரியை துவக்கி வைக்கும் - இது
புரவலர்கள் போற்றும் முகவரி.

சிறுகச் சிறுக சேரும்
மாணவச் செல்வங்களை
வருக வருக என்றே
வரவேற்று உதவிக் கரம் நீட்டும்.

பல்வேறு மாணவர்களுக்கும்
வெவ்வேறு எண்ணங்கள் என்ற போதும்
ஒரு வழியில் ஒருநிலைப்படுத்தும்
மனிதநேய நெறிமுறை இதன் நோக்கம்.

கருவாய்ச் சுமக்கும் - தாய் போல
மாணவர்கள் நலன் கருத்தினில் நிரப்பும்
ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளாய் பாவிக்கும்
இது எங்கள் முகவரி குடும்பம்

-அருண்ராஜ்
முகவரி மாணவர்

அமைதியும் மகிழ்ச்சியும், கடைகளிலோ, காடுகளிலோ கிடைப்பவை அல்ல;
அவை உங்களுக்கு உள்ளேயே வேரூன்றி உள்ளவை.

- சத்குரு

# நாட்டுக்கு உழைத்த நல்லவர்கள்



உங்கள் மகிழ்ச்சிக்கு இன்னொருவரை மூலமாக உபயோகப்படுத்த முயற்சி செய்வது,
நமது மகிழ்ச்சி நமது கைகளில் இல்லை என்பதையே காட்டுகிறது!

\- சத்குரு

# இவர்களில் எத்தனை பேரை நம்மால் அடையாளம் காணமுடிகிறது. முயற்சி செய்து தான் பார்ப்போமே . . .

1. சித்திரஞ்சன் தாஸ்
2. அரவிந் கோஷ்
3. சுப்பிரமணிய பாரதி
4. லோகமான்ய திலகர்
5. மேடம் பிகாஜி காமா
6. அருணா ஆசப் அலி
7. செண்பகராமன்
8. ஆச்சாரியா வினோபா பாவே
9. அன்னி பெசன்ட்
10. எம்.என்.ராய்
11. வாஞ்சிநாதன்
12. லாலா லஜபதி ராஜ்
13. மதன்லால் திங்ரா
14. சுவாமி விவேகானந்தர்
15. நீலகண்ட பிரம்மச்சாரி
16. பிபின் சந்திரபால்
17. சுப்பிரமணிய ஐயர்
18. சுபாஷ் சந்திர போஸ்
19. கொடிகாத்த குமரன்
20. சியாமா பிரகாஷ் முகர்ஜி
21. பகதூர் ஷ ஜாஃபர்
22. மங்கள் பாண்டே
23. வ.உ.சிதம்பரனார்
24. சர்தார் அஜீத் சிங்
25. ரவீந்ததிரநாத் தாகூர்
26. சந்திர சேகர் ஆசாத்
27. உஷா மேத்தா
28. ராம்சிங் குக்கா
29. அஸ்ஃபகுல்லா கான்
30. ராணி லட்சுமி பாய்
31. தாந்தியா தோபே
32. கோபால கிருஷ்ண கோகலே
33. குதிராம் போஸ்
34. சுப்பிரமணிய சிவா
35. பகத்சிங்
36. சாவர்க்கர்
37. பக்கிம் சந்திர சட்டர்ஜி
38. அல்லூரி சீத்தாராம ராஜீ
39. வசுதேவ் பல்வந்த் பாட்கே
40. மகாத்மா காந்தி

குறிப்பு : நம் தலைவர்களை அடையாளம் கண்டவர்கள் சரிதான் என்பதை உறுதிப்படுத்த www.mugavarifoundation.org பாருங்கள்.

நன்றி: ஜெ.பிரபாகரன்
எண்ணங்களின் சங்கமம்

ஒவ்வொருவரும் மற்றவரைவிட தனிச்சிறப்பு உடையவராக இருக்க முனைவதே மனித குலத்தின் அடிப்படைப் பிரச்சனை. ஒரு தாவரத்தைப் போல் இயல்பாக இருந்தால்தான், வாழ்வின் உன்னதமான பரிமாணம் புலப்படும்.
- சத்குரு

# BALAJI RUBBER INDUSTRIES PRIVATE LIMITED

BRI

Regd. & Admin. Office : "SURYA TOWERS', 12 Maravaneri 2nd Cross, SALEM – 636 007. TAMIL NADU INDIA
Ph : 91-427-4047677. 2452269, 2452271, Fax : +91-427-2452270
Email: info@rubberreclaim.com www: www.rubberreclaim.com

▶ ISO 9001 : 2008 CERTIFIED ◀




05-08-2013

முகவரி - முகம் தெரியாத பல திறமையாளர்களுக்கு முகவரி வழங்கும் அமைப்பு. முகவரி பவுண்டேஷன் என்ற பெயரே அதன் பணியினை நமக்குச் சொல்கிறது. வாழ்வைப் பற்றிய பயம், எதிர்காலம் என்ன ஆகுமோ. எப்படித்தான் என்னை நான் அடையாளப்படுத்தப் போகிறேனோ... நாலாபுறமும் என்னைச் சுற்றி சுமையாய் இறுக்கிக் கொண்டிருக்கும் வேகமான இன்றைய சமுதாய அமைப்பில் ஏழ்மையின் காரணமாக இருட்டிலே தள்ளிவிட்ட நிலைபோன்றதொரு சூழலில் சிக்கித்தவிக்கும் மாணவ கண்மணிகளின் கனவுகளை நனவாக்கும் அற்புத சக்தி... அதன் பெயர் முகவரி பவுண்டேஷன். எந்தவொரு அமைப்பும் அதனை உருவாக்கியவரின் உழைப்பினால் மட்டுமே வெற்றி பெற முடியும் என்பது வரலாறு. அப்படி தன்னைத்தானே முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு, ஏழ்மையில் வாடும் மாணவ சமுதாயத்துக்கு பணி செய்வதே தன் வாழ்வின் லட்சியம், எனத் திண்ணமாய் தன் மனதில் பதிய வைத்துக் கொண்டு, எப்பொழுதும் பூத்த பூவாய் புன்முறுவல் முகத்துடன் காட்சி தரும் முகவரி ரமேஷ் என் இதயத்தில் ஆழமாக இடம் பிடித்தவர். அவர் உருவாக்கிய இந்தமுகவரி பவுண்டேஷன் அமைப்பு இன்று ஆல விருட்சமாய் வளர்ந்து பலருக்கு வாழ்வு அளித்துக் கொண்டிருக்கிறது இங்கே பயின்றவர்கள் பல நல்ல பதவிகளைப் பெற்று உயர்வு பெற்றுள்ளார்கள். உயர்வு பெற்ற அவர்கள் உன்னதமான ஒரு சமுதாயத்தை உருவாக்கும் பண்புகளை பெற்றிருக்கிறார்கள் என்பது தான் நம்மையும், நம் சந்ததிகள் வாழப்போகும் இந்தச் சமுதாயம் சீர் கொண்டதாக செழிப்பாக இருக்கும் என்கிற நம்பிக்கையையும் நமக்கு ஏற்படுத்துகிறது. உண்மையிலேயே இந்த நம்பிக்கைக்கு வித்திடும் இடமாகத் தான் முகவரி பவுண்டேஷன் இருக்கிறது. சிறுதுளி பெரு வெள்ளம் போல ... இங்கே உருவாகும் மாண்பமை பண்புகள் பெருகிப் பெருகி வளர்ந்தோங்கும் என்பதில் ஐயமில்லை.

சீரோடும், சிறப்போடும் செயல்பட்டு வரும் முகவரி பவுண்டேஷனுக்கு உறுதுணையாய் பல நல்ல இதயங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த நல்ல இதயங்கள் முகவரி பவுண்டேஷனுக்காக நிதியை ஒதுக்கும் பொழுது அடையும் ஆத்ம மகிழ்ச்சி அளவிட முடியாதது.

முகவரியோடு தொடர்புடைய அத்துணை நல்ல உள்ளங்களுக்கும் அவர்களையெல்லாம் ஒருங்கிணைக்கும் அற்புதமான பணியினை செவ்வனே ஆற்றி வரும் முகவரி ரமேஷ் மற்றும் நண்பர்களுக்கும் எனது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்.

நன்றி.

இவண்

K. வைத்தியலிங்கம்,

சேர்மேன் பாலாஜி ரப்பர் குரூப்ஸ் - சேலம்


Factory : Udupathanpudur Road, Atthanur (Post), Rasipuram (T.K.),
Namakkal (Dt.) - 636 301. Tamilnadu, INDIA.
+ 91-4287 - 255137, 255537


ஆழமான ஈடுபாடு இருந்தாலொழிய வாழ்க்கையின் அழகை உங்களால் அறிந்துகொள்ள முடியாது

- சத்குரு

**Surien Pharmaceuticals (P) Ltd.**

Factory : 108, Chekkady Street, Kovur, Chennai – 602 101, INDIA
Phone : 044- 2478 2478, 2486 9901, Fax : 044 – 2478 2784, E-mail: pharma_surien@yahoo.com

**R. Krishnamoorthy, B.Sc., M.B.A.**
Managing Director

நாள் : 29.08.2013



ஒவ்வொரு மனிதனுக்கும் தேவையானது கல்வி, ஏன் கல்வி அவசியம் என்றால் இந்த உலகத்தில் எந்த சக்தியாலும் அழிக்க முடியாத ஒரே சொத்து கல்விதான். அதில் ஒரு மனிதன் முழுமை பெற்றுவிட்டால். தன் வாழ்க்கையை இனிதே வாழ்ந்துவிட முடியும்.

அதிலும் தொடக்க கல்வி என்பது. செலவு குறைவாக அரசாங்க பள்ளிகளிலோ அல்லது தனியார் பள்ளிகளிலோ கிடைத்து விடுகிறது அதை முடித்து மாணவ, மாணவிகள் உயர்கல்விக்கு செல்லும் போதுதான் தன் வாழ்க்கை கல்வியை தொடங்குகின்றனர். உயர்கல்வியில் தான் நிறைய பணம் செலவாகிறது ஒரு வேலை வாழ்க்கை கல்வி என்ற உயர்கல்வி சரியாக அமையாவிட்டால் 12 ஆண்டுகள் தான் கற்ற கல்வியின் பலன் இன்றி, ஒரு வளர்ந்து வந்த செடியானது மொட்டாக பூக்காமல் காய்க்காமல் கருகிவிடுவதுபோல் இவர்களின் வாழ்க்கையும் திசைமாறி போய்விடுகிறது அவர்கள் உயர்கல்வி செல்லும் போதுதான் தான் யார் (Doctor, Engineer, IAS, IPS...) என்கிற அடையாளப்படுத்தப்பட்ட முகவரி கிடைக்கின்றன. அரசாங்க புள்ளிவிவரத்தின் படி 1 ஆம் வகுப்பு சேர்பவர் 100 பேர் என்றால், கல்லூரியில் கல்விபயில செல்பவர் 15 பேர் என்கிறது. இந்த நிலை மாற வேண்டும்.

அதற்கேற்ப, தான் வாழ்ந்தால் போதும் தம் குடும்பம் வாழ்ந்தால் போதும் என்று சுயநலமே குறிக்கோளாக கொண்டு வாழ்கின்ற இந்த மனித சமுதாயத்தில் அழிக்க முடியாத முகவரி கொடுக்கின்ற உயர்கல்விப்பணியை முகவரி பவுண்டேசன் நிறுவனர் “முகவரி” ரமேஷ் அவர்கள் செய்து கொண்டு இருப்பது மிகப் புனிதமான, மனித நேய மிக்க சேவையாகும். “முகவரி” ரமேஷ் அவர்கள் இப் பணியினை தான் ஏழையாக இருந்தாலும், பல நல்ல மனித நேயமிக்க உள்ளங்களை தேடிச்சென்று அவர்களிடமிருந்து உதவிகளை பெற்று நேரடியாக அந்த மாணவருக்கே அல்லது அந்த மாணவர் பயிலும் கல்வி நிறுவனத்திற்கே கொடுப்பது அவர் செய்யும் சமூக சேவையில் நேர்மையை பார்க்க முடிகிறது.

இவரின் சேவை அன்னை தெராசாவின் சேவைக்கு இணையாக ஒப்பிடத்தக்கது என்றே நான் கருதுகிறேன். மேலும் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்கள் கனவு கண்ட சுயநலமில்லா, தேசப்பற்றுள்ள, சுயஒழுக்கம் கொண்ட மற்றும் உயர்ந்த இலட்சியத்தை கொண்ட இளைஞர்களை உருவாக்குவதில் “முகவரி” ரமேஷ் வெற்றிக் கண்டுள்ளார் என்றே தோன்றுகிறது. முகவரி பவுண்டேசன் பணிகளை 2009 லிருந்து 5 வருடங்களாக நான் நன்கு அறிவேன். முகவரி பவுண்டேசன் மாணவர்களையும் எனக்கு நன்கு தெரியும் குறிப்பாக திரு. வெற்றிவேல், திரு. பூபதிராஜா, திரு. ரகுபதி, திரு. சிவக்குமார், செல்வி. பானுப்பிரியா போன்ற மாணவ, மாணவியர்கள் “முகவரி” ரமேஷ் அவர்களுக்கு பக்கபலமாக இருந்து, முகவரி பவுண்டேசனை அடுத்த கட்ட பரிணாமத்திற்கு எடுத்துச் செல்வது மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது.

இவரது சேவை இந் நாட்டிற்கு அவசியம் தேவை இந்த சேவை தொடர நல் உள்ளம் படைத்த மனித நேயமிக்க செல்வந்தர்கள் உதவி செய்ய முன்வந்தால் முகவரி பவுண்டேசன் பல நல்ல வல்லுநர்களை உருவாக்கி நாட்டுக்கு அர்ப்பணிக்கும்.

முகவரி பவுண்டேசன் முயற்சியில் என்றும் நான் உடனிருப்பேன்.

(R. Krishnamoorthy)

உங்களால் இயலாத ஒன்றைச் செய்யவில்லை எனில் ஒரு பிரச்னையும் இல்லை.
உங்களால் முடியக்கூடிய ஒன்றைச் செய்யாமல் விடுவதுதான் துயரமான ஒன்று!

\- சத்குரு

# வானவில்

இவ்வுலகில் உள்ள ஒவ்வொரு உயிருக்குள்ளும் மனிதநேயம் உள்ளது. சரியான சூழ்நிலையை உருவாக்குவதன் மூலம் ஒவ்வொருவரிடமும் உள்ள உள்ளார்ந்த மனிதநேயத்தை தூண்டிவிட முடியும். அப்படி தூண்டிவிடப்பட்ட மனிதர்கள், மேலும் பலரிடம் மனிதநேயத்தை தூண்டிவிட ஒரு கருவியாய் இருப்பார்கள். அப்படிப்பட்ட மனிதநேயத்தை உயிர்ப்போடு வைத்திருக்கும் பலரை உருவாக்குவதே முகவரியின் நோக்கம்.

தங்கள் வாழ்வின் லட்சியத்தை அடைய முகவரியின் உதவியை நாடி வரும் மாணவர்களுக்கு, அவர்களின் குறிக்கோளை அடைய முகவரி உதவி வருகிறது. அத்துடன் முகவரியின் வேலை முடிந்து விடுவதில்லை. அந்த மாணவர்களின் உள்ளத்திலிருக்கும் மனிதநேய உணர்வை தட்டி எழுப்பும்போது தான் முகவரியின் நோக்கம் முழுமையடைகிறது.

பாதையே இல்லாத ஒரு மலை இருக்கிறது. அந்த மலையின் உச்சியை அடைய ஒருவர் நினைக்கிறார். அதற்காக மலையில் உள்ள முட்களையெல்லாம் வெட்டி ஒரு சுமாரான பாதையை உருவாக்குகிறார். அவர் உச்சியை அடைய 6 மாதங்கள் ஆகிறது. அடுத்ததாக வருபவர் அந்த பாதையில் இருக்கும் கற்களை அகற்றுகிறார். அவர் சென்றடைய 3 மாதங்கள் ஆகிறது. பின்னர் வருபவர் மண்ணை சமன்படுத்தி சாலை அமைக்கிறார். அவர் சென்றடைய 1 மாதம் ஆகிறது. கடைசியில் வருபவர் தார் ஊற்றி நல்ல சாலையை உருவாக்குகிறார். அதனால் அவர் நேராக காரிலேயே வருகிறார். அவருக்கு 1 மணி நேரமே ஆகிறது. முதலில் சென்றவர்கள் பட்ட கஷ்டங்கள் கடைசியில் வருபவரை 1 மணி நேரத்திலேயே உச்சியை அடைய வைத்தது.

ஒவ்வொருவரும் தனித்தனியே அந்த மலையின் உச்சியை அடைய முயற்சி செய்திருந்தால் அவரவரின் திறமைக்கேற்ப 7 மாதங்களோ, 8 மாதங்களோ, 4 மாதங்களோ ஆகும். ஆனால் எல்லோரும் ஒரே பாதையில் வந்ததால் 1 மணி நேரத்திற்குள்ளே வர முடிந்தது. இன்னும் அதே பாதையில் பலரும் தொடர்ந்து வந்தால் 1 நிமிடத்தில் கூட உச்சியை அடைய முடியும் என்பதே உண்மை.

இந்தக் கதையில் முதலில் சென்றவர்களின் உழைப்பு கடைசியில் வருபவர்களுக்கு பயனளிப்பது போல, முகவரியில் முதலில் பயனடைந்த மாணவர்கள், தாங்கள் முயன்று பெற்ற அறிவையும், பொருளையும் அடுத்துவரும் மாணவர்களுக்கு சிறிது பகிர்ந்தளிப்பதன் மூலம் பின்வரும் மாணவர்கள் எளிதில் தங்கள் வாழ்வின் லட்சியத்தை அடைய முடியும். இதைச் செய்வதற்கு முகவரி மாணவர்களை ஊக்கப்படுத்தி வருகிறோம்.

அதன் ஒரு பகுதியாக முகவரி மாணவர்களுக்கு வானவில் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த திட்டத்தில் முகவரி மூலம் பயனடைந்த மாணவர்கள் தங்கள் ஊதியத்தில் 7% முகவரிக்கு அளிக்க முடியும். அது அடுத்து வரும் மாணவர்களின் கல்விக்கு பயன்படுத்தப்படும். இந்த திட்டத்தின் சிறப்பே... இத்திட்டத்திற்கு வானவில் என்று பெயர் சூட்டியது, தற்போது IRTS பயிற்சி பெற்று வரும் M. பூபதிராஜா என்ற முகவரி மாணவரே. இத்திட்டத்தில் முதன்முதலாக தைவானில் ஆராய்ச்சி படிப்பு மேற்கொண்டு வரும் A. ரகுபதி தானாக முன்வந்து பங்கேற்று வருகிறார். மேலும் தற்போது பயின்று வரும் முகவரியின் பல மாணவர்கள் தாங்கள் விரைவில் வேலைக்குச் சென்று, வானவில் திட்டத்தில் இணைய ஆர்வம் தெரிவித்து வருகின்றனர். எதிர்காலத்தில் முகவரிக்கு வரும் புதிய மாணவர்களின் தேவை அனைத்தையும் முகவரியால் பயன்பெற்ற மாணவர்களே பார்த்துக்கொள்ளும் நாளை நாங்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம்.

அந்த வகையில் வானவில் திட்டத்திற்கு பங்கேற்க முன்வந்துள்ள முதல் ஏழு மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர் அடுத்து வரும் சில பக்கங்களில் தங்களின் மகிழ்ச்சியையும், அனுபவத்தையும் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறார்கள். இதை பார்க்கும் போது முகவரியின் நோக்கம் முழுமையடைந்து வருவதை எங்களால் உணர முடிகிறது.

## அனுபவங்கள்

முகவரி மாணவர்கள் அனைவரும் தங்கள் திறமைகளை செம்மைப்படுத்திக்கொள்ள ஈஷா யோகா கற்று கொள்ள பரிந்துரைக்கபடுகிறது. அதோடு மட்டுமல்லாமல் கற்றுகொள்வதற்கான சந்தர்ப்பத்தையும் முகவரி அமைப்பு உருவாக்கித் தருகிறது. யோகா பயிற்சி மாணவர்களுக்கு மனோதைரியத்தை வளர்ப்பதோடு முடிவு எடுக்கும் திறன் சிந்திக்கும் திறன் ஆகியவற்றை வளர்ப்பதை முகவரி மாணவர்களிடம் கண்கூடாக பார்த்திருக்கிறோம்.

குறிப்பு : செப்டம்பர் 13, 14 & 15, 2013 தேதிகளில் சத்குருவுடன் நேரடியாக சென்னையில் 15,265 பேர்கள் ஈஷா யோகா கற்றுக்கொண்டனர். அதில் 30 முகவரி மாணவர்கள் கலந்துக்கொண்டனர். இதற்கான கட்டணங்களை அக்கேஷியா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் இயக்குநர் திருமதி சங்கீதா மோகனவேல் மற்றும் அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர் திருமதி அருமைக்கண்ணு கருணாமூர்த்தி ஏற்றுக்கொண்டார்கள். அவர்களுக்கு எங்கள் நன்றிகளை உரித்தாக்குகிறோம்.

ஒரு வானவில்லின் அனைத்து நிறங்களும் ஒரே ஒளியின் பல்வேறு பரிமாணங்களே.
அதே போல் இந்த உலகின் அனைத்து மதங்களும் ஒரே தெய்வீகத்தின் பல்வேறு பரிமாணங்களே!
- சத்குரு



# வேருக்கு நன்றி கூறும் விழுதுகள்

## வானவில் மாணவர்கள்

### MV01 A. RAGUPATHY



என் பெயர் A. ரகுபதி. சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டத்திலுள்ள ஆரத்தி அக்ரஹாரம் தான் எனது சொந்த ஊர். நான் தற்பொழுது தைவான் நாட்டில் உள்ள NTHU (National Tsing Hua University)-ல் வேதியியல் துறையில் Ph.D. படித்து வருகிறேன். 2005-ம் ஆண்டு நான் B.Sc. முடித்த பிறகு என் குடும்ப ஏழ்மை சூழ்நிலை காரணமாகவும் அடுத்து என்ன செய்வது என்ற வழிகாட்டுதல் இல்லாததாலும் தடுமாறி கொண்டிருந்த எனக்கு திரு. K. ரமேஷ் (Founder of Mugavari) அவர்களால் முகவரி கிடைத்தது. நான் முகவரிக்கு வந்த பிறகு முகவரி தான் எனக்கு அடுத்து என்ன செய்ய வேண்டும், எப்படி படிக்க வேண்டும் என்று சொல்லி கொடுத்து அதோடு அதற்கு உண்டான எல்லா விதமான உதவிகளையும் செய்து என்னை படிக்க வைத்தது. இதை சுருக்கமாக சொல்ல வேண்டுமென்றால் தாகத்திற்கு தண்ணீராக இருந்தாலும், பசிக்கு சாப்பாடாக இருந்தாலும் அதை சரியான நேரத்திற்கு கொடுக்க வேண்டும். இந்த இரண்டையும் எனக்கு சரியான நேரத்தில் கொடுத்து எனக்கு சரியான பாதையை ஏற்படுத்தி கொடுத்தது முகவரி தான். அதோடு மட்டுமில்லாமல் முகவரியின் மூலமாக பல நற்பண்புகளையும் கற்றுகொண்டேன். எப்படியெனில் இதை ஒரு பழமொழியின் வாயிலாக சொல்வது உண்டு. மீனை பிடித்து கொடுப்பதை விட அதை எப்படி பிடிக்க வேண்டும் என்று கற்று கொடுப்பதே சிறந்தது. எனக்கு மீனை எப்படி பிடிக்க வேண்டும் என்று முகவரியால் ஏற்படுத்தி கொடுக்கப்பட்ட ஈஷா யோகா பயிற்சியின் வாயிலாக நான் கற்று கொண்டேன். குறிப்பாக யோகா பயிற்சியின் மூலம் ஒழுக்கம், நம்பிக்கை, மனம் தளராமை, பொறுமை, சகிப்புதன்மை, சரியான முடிவு எடுக்கும் திறன் ஆகியவற்றை கற்றதன் மூலமாக இன்று என்னால் ஒரு சரியான திசையை நோக்கி செல்ல முடிகிறது. இவ்வாறு சரியான திசையில் சென்றதால் தான் இன்று உலகளவில் சிறந்து விளங்க கூடிய பல்கலைகழகங்களில் ஒன்றான தைவான் நாட்டில் உள்ள NTHU-ல் வேதியியல் துறையில் என்னால் Ph.D. நல்ல உதவித்தொகையுடன் மாதம் (ரூ.40,000/-) வரை என்னால் வாங்கி படிக்க முடிகிறது. அதற்காக நான் முகவரிக்கு கடமைப்பட்டுள்ளேன். இந்த உதவித்தொகையில் 7% தொகையை மாதம் (ரூ.2800/-) (தன் கையே தனக்கு உதவி என்று சொல்வது போல்) முகவரியால் உதவிப்பெற்ற என்னை போன்ற மாணவர்கள் வானவில் திட்டத்திற்கு கொடுப்பதன் மூலம் இனி முகவரிக்கு வசதி இல்லாமல் வரும் என்னை போன்ற ஏழை மாணவர்களின் கல்விக்கு சரியான பாதையை ஏற்படுத்தி கொடுக்க முடியும். முகவரி மாணவர் என்கிற பெருமையோடு இந்த செயலை என் வாழ்நாள் முழுவதும் தொடர வேண்டும் என ஆசைப்படுகிறேன்.

### MV02 M. BOOPATHI RAJA



Had there been no Mugavari foundation where would I have been now? I don't know, but certainly not a civil servant. Civil services preparation requires financial support and moral support. Being a son of a farmer, I was not financially capable of aspiring such a big career. Through my friend Vetrivel, I got the opportunity of becoming a member of Mugavari Family.

After my graduation, I joined Mugavari Foundation. I learned Isha Yoga which strengthened my mental power. Through the activities in Mugavari Foundation, I slowly groomed myself towards my dream. With the sponsorship of Mr. R. Krishnamurthy, MD Surien Pharma, I was sent to New Delhi by Mugavari Foundation for civil services preparations. I was not able to clear it in the one-go. It took time for me, In all these hard times, Ramesh Anna, motivated me positively, prayed for me, to say in one sentence, he considered my aspiration as his own. Now I am in Indian Railways Traffic Services (Probationer). My dream is not yet fulfilled, I am working towards that.

I started getting salary from September 2012 and I am contributing to 'Mugavari Foundation-Vanavil Scheme'. Right now I am getting 36,000/- as salary and I am contributing Rs. 2520 (7% of my salary).

"Let us think of education as the means of developing our greatest abilities, because in each of us there is a private hope and dream which, fulfilled, can be translated into benefit for everyone and greater strength for our nation" – John F. Kennedy. Mugavari Foundation in my understanding is exactly doing it… I take pride in being part of Mugavari Family…

வெளியில் உள்ள வரங்களை அனுபவிக்க வேண்டுமானால், உள்நிலையில் சிறிதாவது கவனம் செலுத்த வேண்டும். இல்லையெனில் அனைத்து வாய்ப்புகளும் உங்களைக் கடந்து சென்றுவிடும்!

- சத்குரு

# வேருக்கு நன்றி கூறும் விழுதுகள்

## வானவில் மாணவர்கள்

### MV03 M. VETRIVEL



If we are not doing, what we are capable of we are not only betraying ourselves but also betraying the entire humanity. I would have betrayed myself if I had not met Ramesh Anna. I had literally buried my aim of becoming a civil servant due to the economic hardships our family was facing then. I was working as a primary school teacher when Ramesh Anna came to me on the request of one of my cousin Sankar. Ramesh Anna took extreme efforts and persuade me to bring back my aim. And that is how I became a part of Mugavari.

After that my life had changed completely. It is not apt just to say that Mugavari is helping me in my struggle towards my aim. Today what I learnt, how I see the world and how I think all are the outcome of my being a part of Mugavari. To say simply without Mugavari I am not, what I am. Who else with my economic background can get the chance of going to Delhi for preparing for Civil Services exams? Who else can get a kind relationship with a person like R.Krishnamoorthi Sir who sponsored us through Mugavari? Not to the least who else can have a chance of getting nice relationship with such many good hearts?

In the way towards achieving my goal (UPSC Civil Services Exams) I have fallen thrice. But I never stayed on the ground. Of course with the moral and economic support of Mugavari I am trying again to reach my destiny. In the mean while since I believed that I can be able to work simultaneously without compromising on my studies, I joined as Supervisor in Tamilnadu Agricultural Marketing and Agricultural Business Department by clearing TNPSC Group II Exam. I felt that it will ensure that my human resource will be utilized in a proper way and as I am earning about Rs. 25,000/- per month I can also contribute to Vanavil (means Rainbow) scheme. Like the drop of water which gets the white light from sun and give back as wonderful colours, we the students of Mugavari can give back to the future students what we got from Mugavari in several ways. One such way is sharing a fragment of our earnings (7%) for the studies of upcoming students through Vanavil scheme. Like me my family is very happy as I enrolled myself in Vanavil scheme.

Great deeds are done in the realms of mind well before it occurs in reality. In our minds Mugavari had already reached its Zenith. We are looking forward for the day when it comes in reality. And I will be with Mugavari forever.

### MV04 K. KARTHIKEYAN



எனது பெயர் கார்த்திகேயன். நான் சென்னையில் ஒரு கல்லூரியில் B.Sc. கணிதம் படித்து கொண்டிருக்கும் பொழுது எனது நண்பர் A. பிருதிவிராஜனும் அதே கல்லூரியில் படித்து கொண்டிருந்தார். அவர் ஒரு நாள் முகவரி ரமேஷ் அண்ணாவிடம் அழைத்துச் சென்றார். அவரிடம் எனது குடும்பச் சூழ்நிலை மற்றும் நான் தங்கி படிக்கும் சூழ்நிலை பற்றியும் கூறினேன். உடனே அவர் நீ நாளைக்கே இங்கு வந்துவிடு என்று கூறினார். இப்படித்தான் முகவரி அமைப்புடன் எனக்கு அறிமுகம் கிடைத்தது. முகவரி ரமேஷ் அண்ணாவிடம் நான் 2007ம் வருடம் வந்த பொழுது முகவரி அமைப்பு பொருளாதார நெருக்கடியிலிருந்தது. இருந்த போதும் எனக்கு கல்வி, உணவு மற்றும் தங்குமிடம் ஆகியவற்றை கொடுத்து கவனித்துக்கொண்டது. அங்கேயே நான் B.Sc. முடித்தேன். இதன்மூலம் எங்கள் குடும்பத்தில் முதல் பட்டத்தாரி ஆனேன். பிறகு என் மேற்படிப்பிற்கு முகவரி அமைப்பு எனக்கு உதவியது. நான் நினைத்து பார்க்க முடியாத அளவிற்கு மிகப்பெரிய பல்கலைக்கழகமான SRM பல்கலைக்கழகத்தில் இலவசமாக படிக்க புதிய தலைமுறையின் இயக்குநரான உயர்திருR.P.சத்தியநாராயணன் அவர்களிடம் அணுகிஎனக்கு B.Ed. படிக்க வாய்ப்பினை ஏற்படுத்தி தந்தது. முகவரி அமைப்பு மூலம் நான் பயன் அடைந்தேன்.

உயர்திரு சைதை துரைசாமி ஐயா மற்றும் புதிய தலைமுறை இயக்குநர் உயர்திரு R.P. சத்திய நாராயணன் ஐயா இவர்களைப் போல பல நல்ல உள்ளங்கள் முகவரி அமைப்பிற்கு உதவி வருகின்றனர். முகவரி அமைப்பில் உள்ள வானவில் என்னும் திட்டத்தில் நானும் சேர்ந்துள்ளேன் என்பதில் பெருமிதம் அடைகிறேன். ஏனென்றால் இன்று நான் ஒரு தனியார் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றிக் கொண்டிருக்கிறேன் என்றால் அதற்கு முழு காரணம் முகவரி அமைப்பு தான். இந்த வானவில் திட்டத்தின் மூலம் எனது மாத சம்பளத்தில் இருந்து 7% முகவரி அமைப்பிற்கு அளிக்கிறேன். நான் தரும் இந்த சிறிய தொகை ஏதேனும் ஒரு முகவரி மாணவனின் கல்விச் செலவிற்கு பயன்படுகிறது என்பதில் பெருமையடைகிறேன். அதற்கு காரணம் என்னவென்றால் நானும் முகவரி மாணவன் தானே.

நாம் எப்படி எண்ணுகிறோமோ அப்படியே ஆகிறோம். எதை நாம் உயர்வாக எண்ணுகிறோமோ, அதை நோக்கித்தான் நமது அனைத்து சக்திகளும் இயல்பாகவே நகர்கின்றன!

\- சத்குரு

# வேருக்கு நன்றி கூறும் விழுதுகள்

## வானவில் மாணவர்கள்

### MV05 R. VINOTHKUMAR



என் பெயர் R.வினோத்குமார். எனது சொந்த ஊர் சேலம் மாவட்டத்தில் உள்ள தியாகனூர் புதூர் ஆகும். எனது குடும்பம் பொருளாதாரநிலையில் பின்தங்கியுள்ள குடும்பம். என் தந்தைக்கு இரண்டு கண்களும் தெரியாது. அச்சமயத்தில் +2 முடித்து நல்ல மதிப்பெண்கள் பெற்று பொறியியல் படிப்பிற்கு கட்டணம் முழுவதையும் செலுத்த இயலாத நிலையிலும் விண்ணப்பித்திருந்தேன். அத்தகையசூழ்நிலையில் திரு. K. இலட்சுமணன் என்பவரின் மூலமாக முகவரி அமைப்பினைப் பற்றி கேள்விப்பட்டு, முகவரியில் விண்ணப்பித்திருந்தேன்.

24.05.09 அன்று திருச்சியில் தமிழ்நாட்டில் மிகப்பெரிய பல்கலைக்கழகமான எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகத்தின் வேந்தரை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. வேந்தர் அவர்களிடம் முகவரி ரமேஷ் அவர்கள் எனது குடும்ப சூழ்நிலையைப் பற்றி விளக்கி கூறினார். முகவரி அமைப்பைப் பற்றி அறிந்த, வள்ளல் குணம் கொண்ட வேந்தர் அவர்கள் எனக்கு நான்கு வருடமும் கல்வி மற்றும் விடுதி கட்டணத்தையும் இலவசமாக வழங்கினார்கள் இந்த மிகப்பெரிய பல்கலைகழகத்தில் படிக்கும் வாய்ப்பினை முகவரி அமைப்பின் மூலமாக பெற்றேன். முகவரியின் மூலமாக பெற்ற உதவியால் தான் நான் இப்போது பொறியாளராக உள்ளேன்.

என்னை போன்ற ஏழை மாணவர்களை பொறியாளராக உருவாக்கும் முகவரி அமைப்பிற்கு நிறைய செய்ய வேண்டும் என்று ஆசை. முகவரியில் 'வானவில்' எனும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. முகவரியின் மூலமாக பயின்ற மாணவர்கள் முகவரியின் வளர்ச்சிக்கு 7% தங்களது ஊதியத்திலிருந்து மனமுவந்து வழங்குவது இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். நானும் இத்திட்டத்தில் உறுப்பனராய் இருப்பதை நினைத்து பெருமை அடைகிறேன்.

என்னைப் போலவே முகவரியின் உதவியால் பயிலும் மாணவர்கள் முகவரியின் எதிர்கால வளர்ச்சிக்காக 7% மன முவந்து வழங்கி முகவரியின் எதிர்கால வளர்ச்சியில் முகவரி மாணவர்கள் அனைவரும் பங்கு பெற வேண்டும்.

### MV06 M. RAMESH BHARATHI



I and my brother (M. Rahul Bharathi) studied with the help of Mugavari Foundation. My father was a coolie and my native place was Kamakkapalayam. I studied catering in Shevaroys College of Catering. Ex. MP Mr. R. Devadass helped me to study the course. My brother studied B.E. and he passed away due to cancer. During these odd times, Mugavari was behind us and stood supportingly to pursue my education. I had successfully completed my course and was working at Rain Tree Hotel, Mylapore. I am getting monthly Rs. 6500 and I voluntarily joined Vanavil scheme. I will contribute my 7% of salary to this scheme and I am very happy for this opportunity to contribute to Mugavari Foundation.

### MV07 P. RAMACHANDRAN



வணக்கம். என் பெயர் P. இராமச்சந்திரன். நான் ஆரத்தி அக்ரஹாரம் என்னும் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனது குடும்பம், விவசாய கூலி வேலையை செய்து பிழைப்பு நடத்துகிற குடும்பம்.

எனது பெற்றோர் என்னையும், என் அண்ணனையும் கரும்பு வெட்டும் வேலை செய்து படிக்க வைத்தனர். +2 முடித்து விட்டு, Engineering சேர்ந்த என்னால் கல்லூரிக் கட்டணம் செலுத்த முடியாமல், கஷ்டப்பட்டபோது, எனது நண்பன் மணிமுத்து மூலம் 'முகவரி' அமைப்பை பற்றி அறிந்து சேர்ந்தேன். படிக்க முடியாத சூழ்நிலையில் என்னை படிக்க வைக்க, மாதம், மாதம் எனக்கு முகவரி உதவித்தொகை கொடுத்து உதவியது. 'தக்க சமயத்தில் கிடைத்த இந்த உதவியானது என்னை மேலும் நல்ல முறையில் படிக்க தூண்டியது'.

மேலும், எனக்கு M.E. படிக்க ஊக்கமளித்ததோடு மட்டுமல்லாமல், கட்டண சுமையை பகிர்ந்து கொண்டது. கல்வியில் மட்டுமல்லாது, மனதளவில் திடப்படுத்த, 'ஈஷா யோகா' வகுப்புகளை அறிமுகப்படுத்தி, என்னை சீர்படுத்தியது, எனது பாக்கியம். இன்று நான் பொறியியல் விரிவுரையாளராக தாராபுரம் DR. NIET கல்லூரியில் வேலை பார்த்து வருகிறேன். இப்போது எனது குடும்பம் நல்ல நிலையில் உள்ளது.

நான் ஆதிதிராவிட சமூகத்தை சார்ந்த மாணவனாக இருந்தாலும், முகவரி மாணவர்கள் என்னிடம் எந்தவித பேதமும் இன்றி, ஒரு சகோதர உணர்வுடன் பழகினர். முகவரியில் பல்வேறு சமூக, சமயத்து மாணவர்கள் கூட்டு குடும்பம் போல பழகியது, எனக்கு சந்தோஷத்தை கொடுத்தது, மேலும் படித்தவர்களின் எண்ணிக்கையை விரல்விட்டு எண்ணிவிட கூடிய அளவில் இருந்த எங்கள் சமூக மாணவர்கள், இன்று பொறியியல் உட்பட பல்வேறு படிப்புகளை படிந்துக்கொண்டிருக்கின்றனர். இதற்கு காரணம் நான் மற்றும் மணிமுத்து இருவரும் முகவரியில் படித்ததன் தாக்கமே ஆகும்.

என்னை போன்று வசதியில்லாத மாணவர்கள் முகவரியில் சேரும் இந்த தருணத்தில், அவர்களுக்கு உதவ 'வானவில்' திட்டத்தை வாய்ப்பாக பயன்படுத்தி முகவரிக்கு எனது பங்களிப்பாக என் வருமானத்திலிருந்து 7% முகவரிக்கு கொடுப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

எந்த ஒரு குறிப்பிட்ட நினைவையும் மனதில் இருந்து போராடிப் பிய்த்து எறிவது என்பது நடவாத காரியம். அப்படியும் முயற்சி செய்ய ஆரம்பித்தால், அதுவே உங்கள் முழு நேர வேலையாக ஆகிவிடும்!

\- சத்குரு

# எங்கள் இல்லம்















சென்னை போன்ற பெருநகரங்களில், கல்லூரியில் இடம் கிடைத்தாலும், தங்கி பயில்வது பொருளாதார ரீதியில், எவ்வளவு சிரமமானது என்பது அனைவரும் அறிந்ததே. அப்படியிருக்க மனிதநேயர் சைதை துரைசாமி அவர்கள். முகவரி மாணவர்கள் ஒரு கூரையின் கீழ் தங்கி பயிலும் வண்ணம், முகவரிக்கென ஒரு தனி விடுதியை அமைத்துக் கொடுத்துள்ளார். இங்கு 16 மாணவர்கள் நல்ல முறையில் படித்து இப்போது உயர்கல்வியை பலபகுதிகளில் பயின்று வருகிறார்கள். தற்போது 14 மாணவர்கள் இங்கு தங்கி உள்ளனர். கல்வி பயில்வதோடு மட்டுமல்லாமல், தனித்திறன்களையும் வளர்த்துக் கொள்வதற்கு மாணவர்களுக்கு இது ஒரு வாய்ப்பாக உள்ளது.

இங்குள்ள மாணவர்கள் காலை எழுந்தவுடன் ஈஷா யோகா பயிற்சியை கூட்டாக மேற்கொள்கின்றனர். அதன் பிறகு, முகவரி மாணவர்கள் அறையை சுத்தம் செய்வது, சமைப்பது என அனைத்து வேலைகளையும் தங்களுக்குள்ளே குழுவாகப் பிரித்து செய்து கொள்கின்றனர். குழு மனப்பான்மையை மாணவர்களிடையே இது வளர்க்கிறது. இதன் பிறகு தத்தமது கல்லூரிகளுக்குச் சென்று, மாலை அறைக்குத் திரும்பியதும் மீண்டும் சமையல், குழு வேலைகள் முடிந்து, இரவு உணவிற்குப் பிறகு ஆங்கிலத் திறனை வளர்க்க 'Spoken English' வகுப்புகள் மற்றும் தனித்திறன்களை வளர்க்கும் வண்ணம் வெவ்வேறு நிகழ்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உங்களைத் திருத்திக்கொள்ளாமல், வாசலை இடித்து ஜன்னலாக்குவதாலோ, கழிவறையை இடித்து சமையல் அறையைக் கொண்டுவருவதாலோ, வசதிகள் மாறலாம். ஆனால், வாழ்க்கை மாறிவிடாது!

\- சத்குரு

# பல்துறை மாணவர்கள் குழு



2012ம் ஆண்டு புதிய மாணவ,
மாணவிகளுடன் பூபதிராஜா

முகவரியின் மருத்துவ கல்லூரி
மாணவ, மாணவிகளில் சிலர்





2013ம் ஆண்டு புதிய மாணவ, மாணவிகள், சென்னை விடுதி மாணவர்கள், Interview Panel Students மற்றும் முகவரியின் தூண்களான A.R. முருகதாஸ், ஸ்ரீப்ரியா, அகிலா, விக்னேஷ். மற்றும் ஜெய்சங்கர் (ட்ரஸ்ட்டி)

சென்னை அண்ணா பல்கலை கழக
மாணவ, மாணவிகளில் சிலர்.





குடிமை பணி தேர்வு (Civil Services)
மாணவ, மாணவிகளில் சிலர்

கோயம்புத்தூர் GCT கல்லூரி
மாணவ, மாணவிகள்.



வன்முறையை முன்வைத்து வாழ்க்கையை அமைத்துக் கொள்பவர்கள் கோழைகள்.
அன்பை முன் வைத்து வாழ்க்கையை வாழ்பவர்களே வீரமானவர்கள்!

\- சத்குரு

# நெகிழ்வான தருணங்களில்...



S. சதிஸ்குமார்



G.S துர்கா



P. தாட்சாயணி



2013-ம் கல்வி ஆண்டின் சிறந்த மாணவி பூவிழி



முகவரி குடும்ப விழாவில் முகவரி ட்ரஸ்ட்டி சுந்தரமூர்த்தி



முகவரியின் முதல் UPSC சாதனையாளர் M. பூபதிராஜா
(முகவரி குடும்பவிழாவில்)




முகவரி குடும்ப விழாவில் மேயர்

என்ன நடக்கும் என்று மற்ற கிரகங்களை எல்லாம் கவனித்துக் கணக்கு போடுவதை விடுத்து,
நீங்கள் வாழும் கிரகத்தை கொஞ்சம் பொறுப்புடன் கவனியுங்கள்!

\- சத்குரு

# நெகிழ்வான தருணங்களில்...



P.மணிமுத்து




G. மீனாகௌரி



S. ராஜீவ்காந்தி



ஆரத்தி அக்ரஹாரம் மக்கள் சார்பில் ஆசிரியர் A.P. பரமசிவம்



முகவரியின் குடும்ப விழாவில் IAS, IPS, IRS அதிகாரிகளுடன் மேயர்




பெற்றோர்களின் சார்பில் N. ரவிச்சந்திரன்



ஒரு விதை விருட்சமாகிறது வாசிப்பவர் M. பானுப்பிரியா

ஓர் ஆணால் உணர முடியாத சில நுட்பமான உணர்வுகளை ஒரு பெண்ணால் சுலபமாக உணர முடியும். ஆண் புத்தியால் செலுத்தப்படுகிறான். பெண் உள்ளுணர்வால் செலுத்தப்படுகிறாள்!

- சத்குரு



# DR. P. S. SREEMATHI

MS (GS), FRCS, MAMS (GS), MCh (TS), MNAMS [CVS], FIMSA
**Cardio Vascular and Thoracic Surgeon**
Register No: 19283

Date 14.08.2013

**COMMENDATION TO MUGAVARI FOUNDATION**

It is not every day that one faces a personality called Mr. Ramesh, Founder of 'Mugavari Foundation'. What does he do? Singularly acts as a bridge that helps eager students realize their dreams and helps sponsors to reach their worthy targets.

Medical profession has an in-built merit. It gladdens the hearts of both- the health provider and the beneficiary in no small measure. Any young aspirant, given the opportunity, will struggle to reach great heights. This opportunity that stands stiff in corners is given on a platter to him/her by this unassuming, young, determined crusader- Mr. Ramesh. The efforts that he takes, the struggles heundergoes and the zeal with which he propels himself are testimonies to his present success.

Mugavari Foundation gives opportunities for aspirants for other careers and professions too. A Chartered Account himself with a desire to further the cause of those who aim at great heights belongs to the rare species of do- gooders for goodness sake.

The potentialities and possibilities of Mugavari foundation are enormous as seen by the latest list of graduates who have passed out. It is heartening that beneficiaries of Mugavari Foundation are willing to share Mr. Ramesh's burden.

Teachers are those with an irrepressible drive to propel students to evolve. Mr. Ramesh has the same drive to assist students to reach their ambitions with the support of willing sponsors. May his creed progress!

Dr P S Sreemathi
Managing Trustee
Hearts for Hearts (H4H)

MAYURA AUTOMATION & ROBOTIC SYSTEMS PVT. LTD.
(ISO 9001 : 2008 Certified)
#53, 7th Cross Street, West Shenoy Nagar, Chennai - 600 030.
Telefax : 044-2621 0152 / 2621 0691 Phone : 044-2622 2736
Email : mayuras@airtelmail.in Website : www.mayuras.com

12-Aug-2013



Mugavari Foundation is a great inspiration.
If every one of us can reach out and support a few deserving students in our life time we can bring a great change to the country in the near future.

In the last 2 years of my association we found them a trust worthy organisation. We wish them and Sri.Ramesh all the very best.

Warm Regards,

For Mayura Automation & Robotic Systems Pvt Ltd

N. Harihara Subramaniyan
Managing Director

Corporate Office :
Old No.21/2, New No. 25, Crescent Road, West Shenoy Nagar, Chennai - 600 030'. Tamilnadu. Phone : 044-2626 0346/3290 7010

யோக அறிவியலின் சாரமே, ஒருவரின் புரிதலை மேம்படுத்துவதுதான்.

\- சத்குரு

**Smart Leaders IAS**
**Institute For Administrative Services**
No.9, Plot No. 2163, 12th, Main Road
(Opp. to Grace Matriculation School)
Anna Nagar West, Chennai 600 040
Ph: 044 65494545 Mobile: 72000 10122

From the desk of Smart Leaders Management...



Greetings,

In this existential instrumental world it is rare to see persons striving for a large common cause. Most of the institutions and individuals are motivated by their quest for monetary profit. Few exceptions like Mugavari foundation and Mr. K. Rameash makes me feel happy.

Mugavari foundation students, who prepare for Civil Services Examination under the guidance of our institute are showing dedication and perseverance. I also heard that a number of students in various fields ranging from medicine to school education are sponsored by the said foundation. These students come from a humble socio economic background.

Mr. Ramesh is doing a commendable service through the foundation. The name foundation "Mugavari" is very apt that it provides an address for these deserving students for a bright future.

It is said that "Being is Seeing" and this applies to the nature of Mr. K. Ramesh. Rather than thinking about his own self, he started working for the betterment of a future society. It is the responsibility of us to encourage him towards this selfless service.

Educating the underprivileged is a noble service and Mr.K. Ramesh is doing this.

My heartiest Wishes

Regards

Place: Chennai
Date: 12-08-2013

S. SIVARAJAVEL
FOUNDER-DIRECTOR
SMART LEADERS IAS

www.smartleaders.com

தெளிவில்லாத நம்பிக்கை எப்போதும் பேரழிவையே ஏற்படுத்தும்.

\- சத்குரு

**R.SURESH**
Chartered Accountant



Office : 4030288
2313994
2317301

9-A, RAJAJI ROAD,
SALEM ~ 636 007

## TO WHOMSOEVER IT MAY CONCERN

I am happy to note that Mugavari Foundation is bringing out a comprehensive note on its activities for the benefit of the student community and my special congratulations to the entire team for their untiring efforts.

I have been closely following the activities of Mugavari Foundation for the last couple of years. I am extremely happy that it has been lending a helping hand to deserving students from rural back ground especially from economic backward section. The foundation has been instrumental in educating a number of medical professionals, engineers, research scholars, civil servants and other graduates.

I wish the foundation to continue its yeomen service to the student community especially from rural areas.

With Best Wishes



Date: 06-08-2013

R. SURESH
CHARTERED ACCOUNTANT

வாழ்க்கை எனப்படுவது, அழகும் அவலட்சணமும் இணைந்தே இருக்குமாறு அமைக்கப்பட்டுள்ளது. படைப்பின் வசீகரமே அதுதான்!

- சத்குரு



T.PADMANABHAN. M.COM., F.C.A.,
CHARTERED ACCOUNTANT,
D-Z FIRST FLOOR,RAMSQUARE,
NO.2, VILLAGE ROAD,
NUNGAMBAKKAM,
CHENNAI-34

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

07/09/2013

"**MUGAVARI**", it gives actual mugavari to many students from rural areas. Mr.Ramesh is doing excellent service to the poor, needy and meritorious students. He met me first time about 10 years back for a help to a medical student. l know him from that day. Always he talks about the poor student's education and never asked any help for himself. l think he has dedicated his life for the upliftment of poor students from rural areas.

l request all the students those who are coming from rural areas to make use of the Good opportunity. I came to know that there are many Good people willing to help “Mugavari foundation". l salute all those helping hands.

There are many hardworking students facing financial Difficulties to pursue the higher education. More good hearted business people should come forward to help them. I wish Mr.Ramesh, mugavari foundations and each one of the students of Mugavari foundations, all success in their goal.

T.Padmanabhan. M.Com., F.C.A.,
Chartered Accountant

. எதையாவது கேட்டு கடவுளை போரடிப்பதை நிறுத்துங்கள். பிரார்த்தனை உணர்வுடன் அவன் சொல்வதை கவனியுங்கள். தியானம் என்பதுகூட இதுதான்

\- சத்குரு

# பெருமிதத்துடன்...

## வானவில் மாணவர்களின் பெற்றோர்கள்

### அய்யாக்கண்ணு (A. ரகுபதியின் தந்தை)



வணக்கம். எனது பெயர் அய்யாக்கண்ணு. நான் சேலம் மாவட்டம் ஆரத்தி அக்ரஹாரம் என்னும் கிராமத்தில் வசித்து வரும் விவசாயி. எனது மூத்த மகன் A. ரகுபதி முகவரியின் (முகவரி) மாணவன். எனது மகனை B.Sc Chemistry வரை மட்டுமே என்னால் படிக்க வைக்க முடிந்தது. மேற்படிப்பு படிக்க வைக்க என்னிடம் பொருளாதார வசதி இல்லை. அந்த இக்கட்டான சூழ்நிலையில் முகவரி அமைப்பு எனது மகனின் மேற்படிப்பு செலவுகளை M.Sc, M.Phil வரை ஏற்றுக் கொண்டது. இப்பொழுது எனது மகன் தைவான் நாட்டில் உள்ள உலகத்தரம் வாய்ந்த NTHU வேதியியல் துறையில் Ph.D. படித்து வருகிறார். அவருக்கு இப்பொழுது உதவித் தொகையாக மாதம் ரூ.40,000 வழங்குகின்றனர்.

அவனுடைய முதல் மாத உதவித் தொகையை என்னிடம் கொடுத்த பொழுது, எனக்கு கொடுப்பதை விட உன்னை படிக்க வைத்து உன் வாழ்வில் உயர் நிலையை அடையச் செய்த முகவரிக்கு வழங்குவதே நான் பெருமையாகக் கருதுவதாக கூறினேன்.

இந்த உலகில் தான் பெற்ற பிள்ளையையே படிக்க வைக்க இயலாத சூழ்நிலையில், இத்தனை மாணவர்களை படிக்க வைப்பது ஒரு சாதாரண செயல் அல்ல. நானும் என் குடும்பமும் முகவரிக்கு என்றும் உறுதுணையாக இருப்போம்.

### முத்துசாமி (M. பூபதி ராஜாவின் தந்தை)



என் பெயர் முத்துசாமி. நான் சேலம் மாவட்டம் கெங்கவெல்லி வட்டம், ஆணையம்பட்டி கிராமத்தை சேர்ந்தவன். நான் சிறு விவசாயி. என் மூத்த மகன் பூபதி ராஜாவை B.Sc. Maths வரை படிக்க வைத்தேன். மேற்கொண்டு அவன் IAS படிக்க வேண்டும் என்று என்னிடம் கூறினான். என் குடும்ப சூழ்நிலை காரணமாக என்னால் IAS படிக்க வைக்க முடியாமல் இருந்தேன். அப்பொழுது முகவரி என்ற அமைப்பு என் மகனை படிக்க வைப்பதாக கூறியது. அதேபோல் இரண்டு வருடங்கள் டெல்லிக்கு சென்று IAS படிக்க ஆகும் முழு செலவையும் ஏற்றுக்கொண்டது. இதன் விளைவாக கடந்த 2012ம் வருடம் UPSC தேர்வில் வெற்றி பெற்று இப்பொழுது IRTS ஆக லக்னோவில் பயிற்சியில் உள்ளார்.

மேலும் எனது இளைய மகன் தங்கதுரை திருநெல்வேலி மருத்துவ கல்லூரியில் முகவரியின் மூலமாக கல்வி பயில்கிறான். தற்பொழுது என் மூத்த மகன் பயிற்சியில் இருப்பதால் அவனுக்கு மாத சம்பளம் வருகிறது. அதனால் என் இளைய மகனை அவனே படித்து வைத்துக் கொள்கிறான். அதுமட்டும் இல்லாமல் என் மூத்த மகன் தான் வாங்கும் சம்பளத்தில் 7% முகவரியின் வானவில் திட்டத்திற்கு கொடுத்து வருவது எனக்கும் என் குடும்பத்திற்கும் மிகுந்த சந்தோஷம் அளிக்கிறது. என் மூத்த மகன் படிப்பிற்கு உதவிய மேயர் சைதை துரைசாமி ஐயா அவர்களுக்கும், கிருஷ்ணமூர்த்தி ஐயா அவர்களுக்கும் முகவரி அமைப்பிற்கும், அதன் நிறுவனர் ரமேஷ் அவர்களுக்கும் நானும் என் குடும்பமும் எப்பொழுதும் கடமைப்பட்டுள்ளோம்.

### மாரிமுத்து (M. வெற்றிவேலின் தந்தை)



என் பெயர் மாரிமுத்து. நான் சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், ஆரத்தி அக்ரஹாரம் கிராமத்தைச் சேர்ந்தவன். நானும் என் குடும்பமும் நல்ல நிலைமையில் இருந்தோம். ஆனால் கால சூழ்நிலை காரணமாக ஏழ்மை நிலைக்குத் தள்ளப்பட்டோம். என் மகன் வெற்றிவேல் IAS படிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டான். ஆனால் என்னால் படிக்க வைக்க முடியாமல் போராடினேன். அந்த சமயத்தில் முகவரி அமைப்பு எனது மகனை B.A. History Loyola கல்லூரியிலும், அதன் பிறகு IAS படிப்பதற்காக டெல்லிக்கு அனுப்பி வைத்து முழு செலவையும் முகவரியே ஏற்றுக்கொண்டது. இப்பொழுது என் மகன் Group-II தேர்வில் வெற்றி பெற்று திருப்பூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் பணிபுரிகிறார். மேலும் இப்பொழுது IAS தேர்வுக்கு படித்துக் கொண்டிருக்கிறார்.

தற்பொழுது Group-II பணியில் கிடைக்கும் சம்பளத்தில் 7% முகவரியின் வானவில் திட்டத்திற்கு கொடுத்து உதவி வருவது எனக்கும் என் குடும்பத்திற்கும் மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இதனைப் போல் மற்ற மாணவர்களும் செய்தால் நன்றாக இருக்கும்.

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

என்பதற்கு இணங்க முகவரி ஃபவுண்டேஷன் செய்து வருவதை எண்ணி நான் மிகவும் பெருமைப்படுகிறேன். மேலும் என் மகன் படிப்பு செலவு முழுவதும் ஏற்றுக்கொண்ட கிருஷ்ணமூர்த்தி ஐயா மற்றும் அவர் குடும்பத்திற்கும் முகவரி ரமேஷ் அவர்களுக்கும் நாங்கள் நன்றி கடன்பட்டுள்ளோம்.

### கண்ணம்மாள் (K. கார்த்திகேயனின் தாய்)



எனது பெயர் கண்ணம்மாள். நான் சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம் ஆரத்தி அக்ரஹாரம் கிராமத்தில் வாழ்கிறேன். எனக்கு இரண்டு ஆண் குழந்தைகள்

நான் முதலாளி, அவன் தொழிலாளி என்று தேவையில்லாத அடையாளங்களை உருவாக்கிக் கொள்வதால், உள்ளே அகங்காரம்தான் வளர்கிறது. சந்தேகம் பிறக்கிறது, சந்தோஷம் தொலைகிறது!

- சத்குரு

அவர்கள் சிறு குழந்தையாக இருந்தபோது எனது கணவர் இறந்துவிட்டார். குடும்ப சூழ்நிலையால் என் இளைய மகனை மட்டும் மேல்நிலை பள்ளி படிப்பு வரை படிக்க வைக்க முடிந்தது. எங்கள் குடும்பத்தில் யாரும் பட்டத்தாரிகள் கிடையாது. கார்த்திக்கையாவது பட்டத்தாரியக்க வேண்டும் என்று நான் நினைத்து, சென்னையில் நான் கட்டிடத் தொழில் செய்ய ஆரம்பித்தேன். அந்த நேரத்தில் எனது மகனின் படிப்பிற்கு முகவரி அமைப்பு உதவியது. இதன் மூலம் B.Sc. மற்றும் B.Ed. படித்து முடித்தான். இன்று ஒரு தனியார் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றுகிறான். அவர் வாங்கும் மாதச் சம்பளத்தில் 7% (முகவரியின்) அமைப்பின் வானவில் என்னும் திட்டத்திற்கு அளித்து வருகிறான். இதனைக் கொடுப்பதில் எனக்கும், என் மகனுக்கும் சந்தோஷத்தை அளிக்கிறது. எனது மகனின் கல்விக்கு சரியான நேரத்தில் உதவிய முகவரி அமைப்பிற்கு நானும் என் மகனும் மிகவும் கடமைப்பட்டுள்ளோம்.

### ரவிச்சந்திரன் (R. வினோத்குமாரின் தந்தை)



எனது பெயர் நா. ரவிச்சந்திரன். எனக்கு இரண்டு கண்களும் தெரியாது. முகவரி ரமேஷ் அவர்களின் மூலமாக 09.05.2011 எஸ்.ஆர்.எம். பல்கலைகழகம் வேந்தரை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. முகவரி அமைப்பை பற்றி நன்கு அறிந்த வேந்தர் அவர்கள், எனது மகன் பொறியியல் படிப்பிற்கு நான்கு ஆண்டுகள் கல்வி மற்றும் விடுதி கட்டணத்தை இலவசமாக வழங்கினார்கள். இப்போது என் மகன் கட்டுமானத் துறையில் பொறியாளராக உள்ளான். எனது மகன் பொறியாளராகும் வாய்ப்பினை முகவரி அமைப்பு ஏற்படுத்தி கொடுத்தது. இப்போது முகவரி அமைப்பில் உள்ள 'வானவில்' எனும் திட்டத்தில் எனது மகனும் உறுப்பினராய், தன்னை பொறியாளராய் உருவாக்கிய முகவரி அமைப்பிற்கு தனது ஊதியத்திலிருந்து 7% மனமுவந்து வழங்குவதை நினைத்துப் பெருமைப்படுகிறேன். முகவரியின் மூலம் பயின்ற மாணவர்கள் அனைவரும் முகவரியின் எதிர்கால வளர்ச்சியில் பங்கு பெற வேண்டும். முகவரி மூலமாக பயின்ற மாணவர்கள் அனைவரும் தங்களது ஊதியத்திலிருந்து 7% மனமுவந்து வழங்கி முகவரியின் எதிர்கால வளர்ச்சிக்கு உதவ வேண்டும்

### முருகேசன் (M. ரமேஷ் பாரதியின் தந்தை)



என் பெயர் முருகேசன். நான் ஒரு கூலி தொழிலாளி. எனக்கு இரு மகன்கள். மூத்த மகன் ராகுல்பாரதி அவனை B.E. படிக்க வைத்தேன். இளைய மகன் ரமேஷ் பாரதி இவனை ஹோட்டல் மேனேஜ்மென்ட் படிக்க வைத்தேன். காலச்சூழ்நிலை எனக்கு கூலி வேலை சரியாகக் கிடைக்கவில்லை. மகன்களை எப்படி படிக்க வைக்க போகிறமோ, என்ற கவலை என்னை வாட்டி வதைத்தது. அத்தகைய சூழ்நிலையில் எனக்கு "முகவரி பவுண்டேசன் ரமேஷ்" அறிமுகம் எனக்கு கிடைத்தது. எனது இரு மகன்களையும் அழைத்துக் கொண்டு நேரில் அவரிடம் சென்று என் நிலையை விளக்கினேன். அவர் உடனே இருவரையும் முகவரியில் சேர்த்துவிடுங்கள் என்றார். மறுநாளே அவர்களை முகவரியில் சேர்த்துவிட்டேன். மூத்த மகன் ராகுல் பாரதிக்கு கல்லூரி கட்டணம், மாதம் ரூ.2000/-ம் ஊக்கதொகையுடன் அவனுக்கு நல்வழி காட்டினார்.

இளைய மகன் ரமேஷ்பாரதிக்கு கல்லூரிக் கட்டணம் முழுமையும் இலவசமாக ஏற்பாடு செய்து கொடுத்தார்.

விதியின் கொடுமை எனது மூத்த மகனுக்கு இரத்த புற்றுநோய் வியாதி ஏற்பட்டது. எங்கள் குடும்பமே துடிதுடித்துப் போன நிலையில் முகவரி அவனுக்கு முன்நின்று மருத்துவ செலவு, இரத்ததானம் ஆகியவற்றை கொடுத்து கவனித்தது மற்றும் குடும்பத்திற்கு ஆறுதலாக இருந்தது.

அவன் இறந்த பின்பும் இன்று வரை எங்களுக்கு ஆறுதலாக இருக்கிறார்கள். எனது இளைய மகன் நல்ல முறையில் படித்து இன்று சென்னையில் 5 நட்சத்திர ஹோட்டலில் நல்ல சம்பளத்தில் வேலையில் இருக்கிறான். முகவரியே இல்லாமல் போய் விடுவோமோ என்று இருந்த எங்களுக்கு முகவரி தந்த "முகவரி பவுண்டேசனுக்கு" கோடான கோடி நன்றிகள்.

### பச்சமுத்து (P. ராமச்சந்திரனின் தந்தை)



வணக்கம். என் பெயர் பச்சமுத்து. எனது சொந்த ஊர் ஆரத்தி அக்ரஹாரம். சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர். நான் கூலி வேலைகள் செய்து எனது குடும்பத்தை நடத்தி வருகிறேன். கரும்பு வெட்டும் தொழிலையும் செய்வதால் அதில் வரும் வருமானத்தை வைத்து எனது மகன்களை படிக்க வைத்தேன். எனது இளைய மகன் இராமச்சந்திரன் Engineering படிக்க ஆசைப்பட்டான். அவனை படிக்க வைக்க முடியாமல் நான் தவித்துக் கொண்டிருந்தபோது, எங்கள் ஊரை சார்ந்த மணிமுத்து என்ற மாணவனின் மூலம், 'முகவரி' அமைப்பை பற்றி கேள்விப்பட்டு அதில் எனது மகன் சேர்ந்தான்.

அதன் பிறகு எனது மகனின் கல்வி கட்டண சுமையை முகவரி அமைப்பு பகிர்ந்து கொள்ள, எனக்கு நிம்மதி பிறந்தது. எனது மகனின் எதிர்காலம் சிறப்பாக இருக்கும் என்ற நம்பிக்கை வந்தது. எனது மகனும் கல்வி கட்டண பிரச்சனையின்றி கல்லூரியில் படித்தான். கூலி வேலை செய்யும் என்னால் எனது மகனை இந்த அளவிற்கு படிக்க வைக்க முடியும் என்பது சாத்தியமற்றது. ஆனால் என் மகனின் படிப்பு, முகவரியின் மாதாமாதம் வழங்கிய உதவி தொகையால் இது உண்மையானது.

இன்று, என் மகன் ஈரோட்டில் Dr. NIET கல்லூரியில் பேராசிரியராக பணிபுரிகிறார். தன்னுடைய வருமானத்தில் 7% தன்னை உருவாக்கிய முகவரியின் அடுத்த கட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு கொடுப்பதாக என்னிடம் கூற, சந்தோஷமாக சம்மதித்தேன். எங்கள் குடும்பத்தை போல எண்ணற்ற குடும்பத்தின் மாணவர்களுக்கு கல்வி வழிகாட்டும் 'முகவரிக்கு' எனது குடும்பம் என்றும் துணை நிற்கும்.

போட்டிகள் மிகுந்துவிட்ட இந்த நாளில், எதிர்பாராமல் வந்து தாக்கும் பிரச்னைகளே பல இருக்கும்போது, சக மனிதர்களையே பிரச்னையாக்கிக்கொள்வது முட்டாள்தனம்!

\- சத்குரு

# முகவரி பற்றி இதழ்கள்

புதிய தலைமுறை கல்வி

04-03-2013




## ஏழை மாணவர்களுக்கு ஒரு 'முகவரி'

**ஏழை மாணவர்கள் படிப்பதற்கு உதவி செய்து வருகிறது சென்னை வேளச்சேரியில் உள்ள 'முகவரி ஃபவுண்டேஷன்'.**

சேலத்தை அடுத்த ஆனையம்பட்டி புதூர் கிராமத்தைச் சேர்ந்த பூபதி ராஜா, இந்தியன் ரயில்வே டிராபிக் சர்வீஸ் பிரிவில் பணியமர்ந்திருக்கிறார். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய குரூப் 1- தேர்வில் வெற்றி பெற்று, பதிவாளர் பணியை தேர்வு செய்திருக்கிறார் விழுப்புரத்தைச் சேர்ந்த கமலா தேவி. இதுபோன்ற சாமானியக் குடும்பங்களைச் சேர்ந்த ஏழை மாணவர்களுக்கு உதவி செய்துவருகிறது, சென்னை வேளச்சேரியில் உள்ள 'முகவரி ஃபவுண்டேஷன்' என்கிற அமைப்பு. இதுபோல, இந்த அமைப்பின் மூலம் 20 பேர் சிவில் சர்வீஸ் தேர்வுக்கு படித்துக் கொண்டிருக்கின்றனர். எம்.பி.பி.எஸ். படிக்க 10 மாணவர்களுக்கும், எம்.இ. படிக்க 6 மாணவர்களுக்கும் பி.இ. படிக்க 56 மாணவர்களுக்கும் பிஎச்.டி. ஆய்வை மேற்கொண்டு வரும் 5 பேர் உள்பட இதுவரை 179 பேருக்கு இந்த அமைப்பு உதவி செய்து வருகிறது.

''சேலம் மாவட்டம், தலைவாசலுக்குத் தெற்கே உள்ள அகரம் என்று அழைக்கப்படும் ஆரத்தி அக்ரஹாரம் எனும் கிராமம்தான் நான் பிறந்த இடம் ஆகும். கூலி விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த எனக்கு ஒரு அக்கா, ஒரு தம்பி. நான் சி.ஏ. படித்துக் கொண்டிருந்தபோது, என் அக்கா இதயநோய் காரணமாக உயிரிழந்தார். அந்தச் சம்பவம் என் மனதில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது. அந்நேரத்தில் எங்கள் கிராமத்தில் 12-ஆம் வகுப்பு படித்த கஸ்தூரி என்ற மாணவி 1,136 மதிப்பெண்களை எடுத்திருந்தார். இயற்பியலிலும் வேதியியலிலும் 200க்கு 200 மதிப்பெண்கள் பெற்றிருந்த அவர், உயிரியலில் 195 மதிப்பெண்கள் பெற்றிருந்தார். நுழைவுத் தேர்வில் மதிப்பெண்கள் சற்று குறைந்ததால் அம்மாணவிக்கு தனியார் மருத்துவக் கல்லூரியில்தான் இடம் கிடைத்தது. பொருளாதார வசதி காரணமாக அங்கு சேர்ந்து படிக்க முடியவில்லை. 'எங்கள் கிராமத்தில் மருத்துவர் இருந்திருந்தால் ஒருவேளை என் அக்கா இன்று உயிரோடு இருந்திருப்பார் அல்லவா?' என்று மனதில் தோன்றியது. எப்பாடு பட்டாவது இப்பெண்ணைப் படிக்க வைக்க வேண்டுமென்று முடிவெடுத்தேன். நுழைவுத் தேர்வுக்காக ஓராண்டு தனியார் கோச்சிங் சென்டரில் அவரைப் படிக்க வைத்தேன். நுழைவுத் தேர்வில் மூன்றாவது இடம் பிடித்த அவரது கட் ஆஃப் மதிப்பெண்கள் 296.25. செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரியில் அவருக்கு இடம் கிடைத்தது. இயக்குநர் ஏ.ஆர்.முருகதாஸை நேரில் சந்தித்து, அம்மாணவியின் நிலையை எடுத்துச் சொன்னேன். அவரும் அந்த மாணவியின் படிப்புக்கான அனைத்துச் செலவுகளையும் ஏற்றுக்கொள்ள முன்வந்தார். அதனால், அந்தப் பெண் தற்போது டாக்டராகிவிட்டார். இப்படி 2002-ஆம் ஆண்டு தொடங்கியது இந்தச் சமூக சேவைப் பணி. அதிலிருந்து, கல்வி நிறுவனங்களில் படிக்க இடம் கிடைத்தும்கூட குடும்பத்தின் வறுமைச் சூழ்நிலை காரணமாக படிக்க இயலாமல் தவிக்கும் மாணவர்களுக்கு உதவிக்கரம் நீட்டி வருகிறது 'முகவரி' என்கிறார், இந்த அமைப்பின் நிறுவனரான ரமேஷ் (34).

''நன்கு படித்து, அதிக மதிப்பெண்கள் பெற்ற ஏழை மாணவர்களை அடையாளம் கண்டு, அவர்கள் படிக்கத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்கிறோம். இந்த அமைப்பை வேரூன்றச் செய்ததில் வெற்றிவேல் என்ற மாணவனுக்கு முக்கியப் பங்கு உண்டு. சிவில் சர்வீஸ் தேர்வில் வெற்றி பெற்ற பூபதி ராஜா, இதே தேர்வுக்கு படித்துக் கொண்டிருக்கும் பானுப்ரியா ஆகியோர் எனக்கு உறுதுணையாக இருந்து செயல்பட்டு வருகிறார்கள். நாங்கள் பரிந்துரைக்கும் நல்ல மதிப்பெண்களைப் பெற்ற சில ஏழை மாணவர்களுக்கு எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகம் சீட் வழங்கி படிக்கவும் உதவி வருகிறது. எங்கள் மாணவர்கள் தங்குவதற்கும், உணவு உண்பதற்கும், மனித நேய அறக்கட்டளையின் பயிற்சி மைய விடுதியில் இடம் கொடுத்திருக்கிறார் மேயர் சைதை துரைசாமி. சூரியன் பார்மா கிருஷ்ணமூர்த்தி, லேனா ஸ்டீல்ஸ் லட்சுமணன், சேலம் பாலாஜி ரப்பர் குரூப்ஸ் வைத்தியலிங்கம்...என்று எங்களது முயற்சிக்கு உதவி செய்யும் நல்ல உள்ளங்கள் பலர் இருக்கிறார்கள்'' என்று நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார் ரமேஷ். 'அன்ன யாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்.'

விவரங்களுக்கு: www.mugavarifoundation.org

14 ❖ 04 மார்ச் 2013 ❖ புதிய தலைமுறை கல்வி

நீங்கள் துன்பமாக இருக்கும் தருணத்தைவிட, ஆனந்தமாக இருக்கும் தருணத்தில்தான் உங்கள் ஆசை நிறைவேறும் வாய்ப்பு அதிகம்!

- சத்குரு

# முகவரி பற்றி இதழ்கள்

ஆனந்த விகடன்

01-08-2012

இது நம்ம ஊரு வேளச்சேரி ஸ்பெஷல்

ஆனந்த விகடன் 1.8.12 இதழுடன் இணைப்பு

107

## கல்விக்கு முகவரி!



'முகவரி' மாணவர்கள்...

வாசகர் வாய்ஸ்

"'முகவரி பவுண்டேஷன்' என்ற அமைப்பைச் சேர்ந்தவங்க, படிக்க வசதி இல்லாத ஏழை மாணவர்களுக்கு நிறைய உதவிகளைச் செஞ்சிக்கிட்டு இருக்காங்க." இந்தத் தகவலை வாய்ஸ் ஸ்நாப்பில் தெரிவித்து இருந்தார் வேளச்சேரியைச் சேர்ந்த மதி என்ற வாசகர்.

வேளச்சேரியில் உள்ள 'முகவரி பவுண்டேஷ'னுக்குச் சென்றோம். அந்த அமைப்பின் நிறுவனர் ரமேஷ், "எனக்குச் சொந்த ஊரு சேலம் பக்கத்துல ஆத்தூர். எனக்குத் தெரிஞ்ச ஒரு பொண்ணுக்கு எம்.பி.பி.எஸ். சீட்டு கிடைச்சும் படிக்க வசதி இல்லாம ரொம்பக் கஷ்டப்பட்டாங்க. அவங்களை எப்படியாவது படிக்க வைக்கணும்னு நெனச்சேன். அதுதான் இந்த 'முகவரி பவுண்டேஷன்' தொடங்கக் காரணமா இருந்துச்சு. படிக்கும் ஆர்வம் இருந்தும் படிக்க வசதி இல்லாமல் இருக்கிறவங்களைத் தேடிப் பிடிச்சு, உதவி செய்ய ஆரம்பிச்சேன். எங்க ஊருக்குப் பக்கத்து ஊர்க்காரரான இயக்குநர் ஏ.ஆர்.முருகதாஸ்தான் என் ஆர்வத்தைப் பார்த்து முதல்ல உதவி செஞ்சார்.

இப்போ எங்கள் 'முகவரி பவுண்டேஷன்'ல 150 பேரு தங்கிப் படிக்கிறாங்க. இதுக்காக நான் அவங்ககிட்ட எந்தக் கட்டணமும் வாங்குறது இல்லை. கிராமப்புறத்தில் இருந்து படிப்புக்காகச் சென்னைக்கு வர்ற மாணவர்களுக்கு அடைக்கலம் கொடுக்கும் அமைப்பாக எங்க அமைப்பு செயல்படுது.

'முகவரி'யில் இருக்கும் மாணவர்களில் சிலர் சிவில் சர்வீஸ் தேர்வுக்குத் தயாராகிக்கொண்டு இருக்கிறார்கள். நன்றி உணர்வும் மனிதநேயமும் இருக்கும் வரை எங்களுக்கு எந்தக் கவலையும் இல்லை" என்று பெருமிதத்தோடு பேசுகிறார்.

முகவரி அமைப்பில் படிக்கும் மாணவர்கள், எதிர்காலத்தில் வேலைக்குப் போன பிறகு வாங்கும் சம்பளத்தில் ஏழு சதவிகிதத்தை முகவரி அமைப்புக்குத் தர வேண்டும். அந்தப் பணத்தை அடுத்து வரும் மாணவர்களின் கல்விக்காகப் பயன்படுத்துவார்கள்.

இது அன்புச் சங்கிலி!

- சா.வடிவரசு

படம்: க.கோ.ஆனந்த்

● ஆண்டுதோறும் பிப்ரவரி 16-ம் தேதி 'முகவரி டே' என்று கொண்டாடுகிறார்கள். அப்போது முகவரி பவுண்டேஷனில் படித்த மாணவர்கள் அனைவரும் ஒன்று கூடி சந்தோஷத்தைப் பகிர்ந்துகொள்கிறார்கள்.

குறிப்பிட்ட செயலைச் செய்தால்தான் பக்தியோடு இருக்க முடியும் என்றில்லை. ஒவ்வொரு செயலையும் பக்தியுடன் நம்மால் செய்ய முடியும்!

- சத்குரு

# கல்வி ஒளியேற்றும் முகவரி

## சில பெற்றோர்களின் பகிர்வுகள்...



**ஏழுமலை (E.வசந்தகுமாரின் தந்தை)**

என்னுடைய பெயர் ஏழுமலை. என்னுடைய மகன் வசந்தகுமார். நாங்கள் விழுப்புரம் மாவட்டத்தில் விட்டலாபுரம் கிராமத்தில் வசித்து வருகிறோம். என் மகன் +2 முடித்தவுடன் மேல் படிப்பிற்காக சென்னையில் உயர்திரு. மேயர். சைதை துரைசாமி ஐயா அவர்களின் மூலம் விடுதியில் தங்கியிருந்தான். அப்போது முகவரி அமைப்பு இருந்ததை என் மகன் நண்பர்களின் மூலம் தெரிந்துகொண்டு முகவரி அமைப்பில் சேர்ந்தான். கடந்த 5 வருடங்கள் முகவரி என் மகனுக்கு உணவு, தங்குமிடம், ஆங்கில பயிற்சி யோகா போன்றவை அளித்து வருகிறது. என் மகனுக்கு விளையாட்டுத்துறையில் அதிக ஆர்வம் இருப்பதால் முகவரி உதவியால் படிப்பு மற்றும் விளையாட்டில் (கிரிக்கெட்) South Zone Winner, All India Level போன்ற நிலையில் விளையாடி பரிசினை பெற்றார். இப்போது M.Phil சேர்ந்து உள்ளார். அதற்கும் முகவரிதான் உதவி செய்து வருகிறது. மேலும் முகவரியில் "வானவில்" என்னும் திட்டம் உள்ளது என்பதை என் மகன் மூலம் தெரிந்துகொண்டேன். நானும் என் மகன் நல்ல நிலைக்கு வந்தபிறகு "வானவில்" திட்டத்தில் சேரும்படி கூறுவேன். மேலும் முகவரி அமைப்பிற்கு நன்றி கடன் பட்டுள்ளேன்.

**முருகேசன் : (M.பானுப்பிரியாவின் தந்தை)**



என் பெயர் முருகேசன். நான் சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், கல்லாநத்தம் கிராமத்தைச் சேர்ந்தவன். நான் தினமும் சைக்கிளில் சென்று துணி வியாபாரம் செய்து வருகிறேன். என் வருமானம் என் குடும்ப செலவிற்கே போதாத நிலையில், என் மகள் பானுப்பிரியா +2 தேர்வில் பள்ளியிலேயே முதல் இடம் பெற்றிருந்தாள். மேற்கொண்டு அவளை கல்லூரியில் சேர்த்து படிக்க வைப்பதற்கு போதிய வசதி இல்லாமல் தடுமாறிக் கொண்டிருந்த நிலையில் முருகேஷ் மற்றும் லட்சுமணன் ஆகியோர் முகவரி பவுண்டேஷன் பற்றி என்னிடம் கூறினர். அதன்பேரில் முகவரி நிறுவனரை சந்தித்தோம். முகவரி எவ்வித தயக்கமும் இன்றி என் மகளை சென்னையில் உள்ள MIT (Anna University) கல்லூரியில் படிக்க வைப்பதற்கான முழு செலவையும் ஏற்றுக் கொண்டு படிக்க வைக்கிறது. முகவரி இல்லையென்றால் எங்களுக்கு முகவரி இல்லை.

**முத்தம்மாள் (S.செல்வகுமாரின் தாயார்)**



என்னுடைய பெயர் முத்தம்மாள் என்னுடைய மகன் செல்வகுமார். நாங்கள் தருமபுரி மாவட்டத்தில் ஊத்துப்பள்ளத்தூர் என்ற கல்வி வளர்ச்சி இல்லா கிராமத்தில் வசித்து வருகிறோம். என் மகன் +2-வில் 1044 மார்க் எடுத்தும் குடும்ப சூழ்நிலை காரணமாக படிக்க முடியாத நிலையில் தவித்த போது செல்வகுமாரை படிக்க வைக்க முன்வந்தது "முகவரி ஃபவுண்டேஷன்". படிக்க வைப்பது மட்டுமல்லாமல், சென்னையில் தங்குவதற்கு இடமும், சாப்பிடுவதற்கு உணவும், தியானம், யோகா பயிற்சிகளும் அளித்து வருவது குறிப்பிடத்தக்கது. என் மகனைப் போன்ற வசதியில்லா பல ஏழை குழந்தைகளை "முகவரி ஃபவுண்டேஷன்" படிக்க வைத்து வருகிறது என்பதை நன்கு அறிவேன். முகவரி பவுண்டேஷன் என் மகனுக்கு செய்து வரும் உதவிக்கு நானும் என் மகனும் மிகவும் நன்றி கடமைப்பட்டுள்ளோம்.

**கோவிந்தன் (G.சூரியகலாவின் தந்தை)**



ஐயா, வணக்கம். என்னுடைய பெயர் கோவிந்தன். நான் விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், மேல்நாரியப்பனூர் என்னும் சிறு கிராமத்தில் வசித்துவருகிறேன். நான் சிறு விவசாயி. என் மகள் +2 தேர்வில் 1110 மதிப்பெண்கள் பெற்றாள். எனினும் என்னிடம் போதிய பொருளாதார வசதி இல்லாததால் மேற்கொண்டு படிக்க வைக்க இயலவில்லை. அந்த சமயத்தில் தான் முகவரி என்ற அமைப்பினை பற்றி

உங்களது அனுபவத்தில் இல்லாததையெல்லாம், எனக்குத் தெரியாது என்று நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள். இது மிகமிக அவசியமானது!

\- சத்குரு

தெரிந்து கொண்டேன். முகவரி அமைப்பினை தொடர்பு கொண்டு என் மகள் மேற்கொண்டு படிப்பதற்கு உதவி கேட்டேன். முகவரியும் மறுப்பின்றி உதவி செய்ய முன்வந்தது. என் மகள் திருச்சியில் உள்ள சென்னை மருத்துவ கல்லூரி (SRM Group) என்ற கல்லூரியை தேர்வு செய்தார். பின்பு முகவரி ஃபவுண்டேஷன் மூலம் SRM கல்லூரியின் வேந்தர் டாக்டர் T.R. பச்சமுத்து ஐயா அவர்களை சந்தித்து என் குடும்ப சூழ்நிலையை கூறினேன். வேந்தர் அவர்கள் என் மகளின் கட்டண தொகையில் சலுகை வழங்கினார். மேலும் முகவரி பவுண்டேஷன் மாத உதவித்தொகையாக ரூ. 1500/- அனுப்பி வருகிறது. எனவே என் பிள்ளையை போன்ற ஏழைபிள்ளைகளின் வாழ்க்கையில் விளக்கேற்றும் முகவரி ஃபவுண்டேஷனுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.



**இளம்பருதி (E.வித்யாவின் தந்தை)**

எனது பெயர் இளம்பருதி. எனது மகள் பெயர் E.வித்யா. நான் தனியார் பள்ளியில் வாட்சுமேன் வேலை செய்து வருகிறேன். எனது மகள் பனிரெண்டாம் வகுப்பு முடித்தும் மேற்படிப்பு படிப்பதற்கு வழி தெரியாமல் இருந்தேன். என் மகள் கல்லூரியில் படிப்பதற்கு வழிகாட்டியாக முகவரி ஃபவுண்டேஷன் வழிகாட்டி, படிப்பதற்கு உண்டான அனைத்து வசதிகளும் செய்தது. கவுன்சிலிங் செலவு, மருத்துவ கல்லூரியில் சேர்வதற்க்கு செலவு, விடுதியில் தங்கி படிப்பதற்கு, உணவுக்கு என அனைத்து செலவுகளும் செய்து எனது மகளை வாழவைத்த முகவரி ஃபவுன்டேஷனுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.



**சுப்பிரமணியன் (K. இராமரின் மாமா)**

வணக்கம்! எனது பெயர் சுப்பிரமணியன். நான் விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி தாலுக்காவில் உள்ள பெருவங்கூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனது மைத்துனர் இராமருக்கு பெற்றோர் யாரும் இல்லை. சில காலமாக நான் தான் அவருக்கு தாய், தந்தையாக இருந்து வருகிறேன். இவர் உடல் ஊனமுற்றவர், இவருக்கு மேற்படிப்பு பயில என்னால் உதவ முடியவில்லை. அச்சமயத்தில் தான் சேலம் மாவட்டம் தலைவாசல் ஆரத்தி அக்ரஹாரத்தைச் சேர்ந்த முகவரி ரமேஷ் அவர்களை சந்தித்தேன். ராமர் அவர்களுக்கு இப்பொழுது மேற்படிப்பையும் அவரது சூழ்நிலைச் செலவுகளும் முகவரி உதவி செய்து வருகிறது. நான் எனது குடும்பச் சூழ்நிலையால் இவரை படிக்க வைக்க முடியாமல் தவித்த போது முகவரி பவுண்டேஷன் தான் இவரை படிக்க வைத்தது. இப்பொழுது B.Ed. முடித்து விட்டு M.A English சென்னையில் அம்பேத்கர் கல்லூரியில் பயின்று வருகிறார். இப்பொழுது நான் இவரை பற்றி எந்த ஒரு கஷ்டம் இல்லாமல் இருக்கிறேன். காரணம் முகவரிதான். இராமர் அவர்களின் மேற்படிப்பு மேம்மேலும் மலர முகவரியின் ஆசிர்வாதத்தை வேண்டுகிறேன்.



**நமச்சிவாயம் (C. மோகனசுந்தரத்தின் காப்பாளர்)**

என் பெயர் நமச்சிவாயம். நான் ஈரோடு மாவட்டத்தில் சென்னிமலை என்ற கிராமத்தில் பாரதியார் ஆதரவற்ற குழந்தைகள் நல காப்பகம் நடத்தி வருகிறேன். இங்கு 50 ஆதரவற்ற குழந்தைகள் படித்து வருகிறார்கள். இந்தாண்டு கல்லூரி படிப்பை முடித்த காப்பக மாணவன் மோகனசுந்தரம் மேற்கொண்டு சிவில் சர்வீஸ் படிக்க ஆசைப்பட்ட போது எங்களிடம் படிக்க வைக்க போதிய வசதி இல்லை. சென்னையில் எண்ணங்களின் சங்கமம் நடத்தி வரும் ஐயா J.P மூலம் எங்களுக்கு முகவரி பவுண்டேஷன் அறிமுகம் கிடைத்தது. நாங்கள் சென்று முகவரியிடம் உதவி கேட்ட போது அவர்கள் உங்கள் பையனை அனுப்புங்கள் நாங்கள் படிக்க வைக்கிறோம் என்றார்கள். இப்பொழுது மாணவன் மோகனசுந்தரம் முகவரி பவுண்டேஷனில் படித்து வருகிறான். ஏழை, எளிய மாணவர்களை படிக்க வைக்கும் இந்த அமைப்பு சிறப்பாக செயல்பட என்னுடைய வாழ்த்துக்கள். இந்த அமைப்பை நடத்தி வரும் ரமேஷ் அவர்களுக்கு என் நன்றியை தெரிவிக்கிறேன்.

உங்கள் மனமே நீங்கள் விரும்பியபடி இயங்காதபோது, மற்றவர்கள் உங்கள் மனதுக்கு ஏற்ப இயங்கவில்லையென்று கோபம்கொள்வது என்ன நியாயம்?

- சத்குரு

# முகவரி பற்றி இதழ்கள்

11-07-2013

# Be Inspired

11 July, 2013

Stories to Share. Stories to Inspire.

## IN008: HER DREAM FOUND A NEW 'ADDRESS'

Thangayee lay awake at midnight in the roadside pavement after a heavy day's work as a coolie in a construction site in Chennai. On contemplating about her daughter Vijaya's achievement in securing a MBBS seat in Govt college, she was both happy that her daughter could achieve her childhood dream after much hard work and also sad that being her mother she was so helpless in turning that dream into reality.

**Ms. Vijaya**, who lost her father when she was just one year old, dreamed of becoming a doctor, studied hard and secured 197.25 cutoff marks for Medical admission. She understood her mother's plight while arranging the counseling fees of Rs.2,000/- and worried whether her seat will go in vain unable to pay the fees of Rs.30,000/-



Ms. Vijaya along with her fellow Mugavari students

That is when Vijaya came to know about **Mugavari Foundation**, where her hopes still stood a chance. Mugavari provides a platform for noble minds to serve humanity thus benefiting deserving students. She rushed to **Mr.K.Ramesh**, its Founder and explained her situation.

Ramesh, who himself had shed his dreams of becoming a CA, but is ever striving to fulfill the dreams of young aspirants, verified Vijaya's credentials and agreed to adopt her into Mugavari Foundation. Vijaya is now in her First Year MBBS at Kilpauk Medical College, Chennai, Tamil Nadu, India due to Ramesh's effort in locating a sponsor Mr.T.P.Ulaganathan from Perundurai for her studies.

Ramesh toils hard in getting sponsors for each student and ensures only financially backward and deserving students from rural area gets a chance through Mugavari. A proper validation of records is done prior to admission. Currently, 179 students are pursuing various disciplines like Medicine, Engineering, Agriculture, Management and Phd. There are IAS aspirants also who have found a sponsor to coach them.



IAS aspirants with Smart Leaders Sivarajavel

In this academic year, 21 students have approached Mugavari, taking the total to 200 students, out of which Ramesh has found sponsors for 7 of them until now. He's currently in the lookout for sponsors for the remaining 14, which he's confident of finding out through Divine's grace.

**Contact Details:**
**Mr. K. Ramesh**
Mobile: +91-9840030942
Email: mugavariramesh@gmail.com
Website: www.mugavarifoundation.org

**Let's motivate ourselves with these real-life, service-oriented actions of numerous unsung heroes, to make a better world!**

*Send your real life inspirations to* inspirecharitabletrust@gmail.com

A joint initiative to spread inspiring news by NDSO (Ennangalin Sangamam) & Inspire Charitable Trust

ஓர் இலக்கை அடைய விருப்பம் மட்டுமே போதாது,
சரியான செயல்களும் அதை செய்யக்கூடிய திறமையும் வேண்டும்!

\- சத்குரு

# முகவரி பற்றி இதழ்கள்

PROSENSE

01-06-2012

## Ignited Minds – 'Mugavari' Ramesh supports 150 students

After passing the graduation with a Gold Medal, Ramesh hailing from a poor family of Arathi Agraharam village of Salem District joined the articleship for Chartered Accountancy. In 2002, when he admitted his elder sister for some serious illness at Chennai General Hospital, the indifferent and arrogant attitude of the doctors led to the death of his sister. That incident sparked in his mind to get a few doctors from his village to serve the poor people with humaneness.



When he returned to his village, one poor girl Kasthuri with high marks had secured admission in a medical college. As she did not have enough money, she could not pursue her medical course. Ramesh and his family members started collecting money from various sponsors and helped her to join and complete the course. After practising for two years, Kasthuri is now studying MS.

On hearing the news that Ramesh helped Kasturi, many other poor students with high marks started approaching him for support. He got sponsorship from various donors. In the process, he was under confusion whether to pursue his Chartered Accountancy or to help the poor students. At the advice of another poor student Vetrivel, he chose to help the poor students for higher studies, sacrificing his Chartered Accountancy studies. Incidentally, Vetrivel is now an IAS aspirant.

The journey was tough. He wanted to ensure all the poor students from his village got higher education. The financial support from Mr Saidai Duraiswamy (presently the Mayor of Chennai Corporation) and an industrialist Mr R Krishnamurthy (MD of Suryan Pharma) helped many poor students to pursue higher education in various institutions. Later many other sponsors also supported this initiative.

Nearly 150 students are pursuing degree and post graduate courses in various professional and technical institutions. A few of them are pursuing PhD also. 33 students are now preparing for IAS and other Civil Services. Ramesh has arranged sponsorship for preparation of Civil Service Examinations too. A month ago, one of the students, Bhoopathy Raja was selected for Indian Revenue Service (IRS) and he will be joining duty soon.

Ramesh started **Mugavari Foundation** with some of his village friends as Trustees to take care of this activity. 'Mugavari' in Tamil means 'address'. Through this Foundation, Ramesh wants to give an identity to all poor students with higher Qualification. Out of 150 students, 60 are from his small village. The others are from the neighbouring villages.

More than 30 male students are living under a single roof, the accommodation provided by Mayor Mr Saidai Duraiswamy. All the beneficiary students have pledged to support poor students in the same way, after they get into employment. "My aim is to make nearly 100 IAS and allied civil service officers, to serve the nation with commitment", says Mr 'Mugavari' Ramesh with beaming confidence.

Their website is http://www.mugavarifoundation.org/ and they can be reached through mail mugavariramesh@gmail.com

மனஅழுத்தம் என்பது நீங்கள் மேற்கொண்டுள்ள வேலையினால் வருவதல்ல.
நீங்கள் உங்களைச் சரியாகக் கையாளாததால் வருவது!

\- சத்குரு

# முகவரி பெற்ற விருதுகள்




விவேகானந்த விருது
எண்ணங்களின் சங்கமம் ( 30.06.2013)



*NDSO Award*
எண்ணங்களின் சங்கமம் (6.01.2013)




சாந்தி ஆசிரமம் விருது
(9.08.2011)




பாலம் விருது (2.10.2007)




காமராஜர் விருது
நல்லோர் வட்டம் (15.07.2011)




*Lions Club Award, Chennai*
*(16.12.2012)*

யார் வேண்டுமானாலும் கடவுளை நேசிக்கலாம்.
ஏனெனில், கடவுள் யாரிடமும் எதுவும் கேட்பதில்லை

\- சத்குரு

# நெகிழ்வான தருணங்களில்...



பாலம் கல்யாணசுந்தரம் ஐயாவுடன் பூபதிராஜா



நந்தகுமார் IRS உடன் பூபதிராஜா




நீதியரசர் V. ராமசுப்பிரமணியத்திடம் பரிசு பெறுகிறார் நம் மாணவி M. பானுப்பிரியா



புதிய தலைமுறை நிர்வாக இயக்குனர் R.P. சத்தியநாராயணனுடன் முகவரியின் இரு கண்களான M. வெற்றிவேல் M. பூபதிராஜா.



தமிழருவி மணியனுடன், முகவரியின் இரு கண்களான M. வெற்றிவேல் M. பூபதிராஜா

தவறுகளை ஒப்புக்கொள்வது என்பது, எதிரிகளையும் நண்பர்களாக்கித் தரும் வரம்.
எதிர்த்து வீழ்த்த முடியாத பலம்!

\- சத்குரு

# நல்லோர்வட்டம்



மூன்றாவது சக்தி

கோடம்பக்கம் 2020



நன்கு படித்த பண்பு, திறமை, சமூக அக்கறை கொண்ட இளைஞர்களே நாட்டின் மிகப்பெரிய சொத்து ஆகும்.

துரதிஷ்ட வசமாக இப்படிபட்ட தன்மை வாய்ந்த மாணவர்கள், இளைஞர்கள் மிக அதிகமாக 'வறுமைநிலை உள்ளவர்களிடையேதான்' காணப்படுகிறார்கள். இந்த நான்கு குணங்களும் சேர்ந்து அமைவது அபூர்வமானதே.

அப்படிபட்ட மாணவர்களை இளைஞர்களை கண்டறிந்து அவர்களுக்கு முழு வசதிகளையும், வாய்ப்புகளையும் ஏற்படுத்தித் தருவது சமுதாயத்தின் கடமை மட்டுமல்ல, அப்துல்கலாம் அவர்களின் நம்பிக்கையான 'வளமோங்கிய பாரதம் 2020'க்கு அளிக்கும் மூலதனமாகும்.

அப்படிபட்ட பாரதத்தை உருவாக்க இம்மாணவர்கள் மிகச்சிறந்த கருவி ஆவார்கள். இத்தன்மை வாய்ந்த இளைஞர்களே 'வளமோங்கிய எதிர்கால இந்தியாவுக்கு எல்லா பகுதிகளிலும் எல்லா துறைகளிலும் தலைமைப் பொறுப்பேற்கும் நிலை' உருவாக்கப்பட வேண்டும்.

இப்பண்புகள் நிறைந்த மாணவர்களுக்கும், அவர்களின் கல்வியின் உயர்நிலைக்கும் இடையில் வெற்றிடமயமாய் அமைந்திருப்பது, ஏழ்மையும் வறுமையும். இந்த வெற்றிடத்தை நிரப்பும் முக்கியப் பணியில் 'முகவரி' அமைப்பு ஈடுபட்டு வருவது 'நாட்டுக்கும் இப்படிபட்ட மாணவர்களுக்கும்' வரப்பிரசாதம்.

இந்த முக்கியத்துவம் வாய்ந்த பணியை துவக்கி, மிகுந்த அர்ப்பணிப்போடு செயல்பட்டுவரும் மதிப்பிற்குரிய உயர்நிலை இரமேஷ் அவர்கள் மிகவும் சரியான வகையில் வெளிப்படையாக செயல்பட்டு வருகிறார். இப்படிபட்ட சிந்தனையும் செயல்பாடும் மிகவும் அரிதானதாகும்.

ஆகவே நாட்டு நலனில் அக்கறை உள்ள செல்வந்தர்கள், மற்றும் கல்வித்துறையில் பல்வேறு வசதி வாய்ப்புகளை பெற்றுள்ளவர்கள் அனைவரும் தாமாக முன்வந்து முகவரி யை நாடி தேடி சென்று, பங்களிக்க முன்வரவேண்டும்.

இந்த குறிப்பிட்ட முயற்சியானது வரும் கல்வி ஆண்டிலேயே இமயம் முதல் குமரி வரை நாடு நெடுகிலும் தகுதி வாய்ந்த அனைத்து மாணவர்களையும் கண்டறிந்து அல்லது அப்படிபட்ட மாணவர்கள் நாடிவரும்போது தடை ஏதுமின்றி நிதியுதவி அளித்து 'முகவரி' யில் பங்கேற்பதை பாக்யமாக கருதுவோம். **உலகிலேயே கல்வி அறிவுபெற்ற உயர்ந்த நாடாக பாரத்தை உருவாக்குவோம்,**

இப்படிக்கு

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு. -731

9A, Sivan Kovil South Street, Kodambakkam, Chennai – 600 024.
Ph: 9791005771, e-mail: nallorevattam@yahoo.com www.nallorevattam.com

உங்களுக்கான சூழ்நிலைகளை நீங்களே உருவாக்கிக்கொள்வதில்தான்
மனிதனின் முழு ஆற்றலும் உள்ளது!

- சத்குரு

NDSO

Regn. No.2037 Donations exempted u/s 80G of IT Act 1961

Networking and Development Centre for Service Organizations (Charitable Trust)

# முகவரி



நமது சமுதாயம் சமநிலை அடைய எத்தனையோ மகான்கள் தன்னாலான மனிதநேயப்பணிகளை தொடர்ந்து செய்துவருகின்றனர் அவர்களில் ஒருவராகத்தான் முகவரியையும் அதன் அச்சாணியாக திகழும் திரு ரமேஷ் அவர்களையும் எண்ணங்களின் சங்கமம் பார்க்கிறது.

எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும் குறிப்பாக கல்வியை ஏழை எளிய குக்கிராம மக்களும் பெறவேண்டும் என்பது பரந்த இதயமுள்ளவர்களின் விருப்பம், இந்த தணியாத தாகம் முகவரிக்கும் அதன் செயல்வீரர்களுக்கும் இருப்பதை நம்மால் உணர முடிகிறது.

நமது தேசத்தந்தை மகாத்மா காந்தி அவர்களின் எண்ணப்படியான பாரதத்தை உருவாக்க முகவரி விதைக்கும் விதைகள் முளைத்து வளர்ந்து மரமாகி மானிடத்திற்கு மகத்தானதோர் பலன் தரும் என்ற உறுதியான நம்பிக்கையுடன்.

உங்கள்
அன்பு

09.08.2013

D-4, Varasidhi Vinayagar Apartments, No.10, 5th Cross Street, Trustpuram, Chennai - 600 024. Tamilnadu, India.
e-mail: jp.sangamam@gmail.com / Website: www.ndsoindia.org

ஒவ்வொரு தாவரமும், ஒவ்வொரு புழுவும் தங்கள் பிழைப்பைத் தாங்களே கவனித்துக்கொள்கின்றன, ஆனால் மனிதன் மட்டும்தான் தன் பிழைப்புக்கு, மேலே பார்த்து எப்போதும் கடவுளைக் கூப்பிடுகிறான்!

\- சத்குரு

ஆசான் அறிவே துணை

# தீபம் அறக்கட்டளை



(அரசு பதிவு எண் : 2035 / 07)
30, திரௌபதி அம்மன் கோயில் தெரு, வேளச்சேரி
சென்னை - 42. செல் : 94440 73635
E-mail : trust.deepam@yahoo.co.in,

**பட்டினியில்லா... நோயில்லா... குற்றமில்லா... வளமான பாரதம் படைப்போம்.**

M. பாலகிருஷ்ணன்
நிறுவனர்

E. தீனதயாளன்
நிர்வாகி

R. நாராயணமூர்த்தி
நிர்வாகி

B. புஷ்பா
நிர்வாகி

P. ஜோதீஸ்வரி பாண்டுரங்கன்
நிர்வாகி

## அறக்கட்டளையின் நோக்கங்கள்

- ஏழைகளுக்கு அன்னதானம் செய்தல்.
- ஏழை மாணவர்களுக்கு இலவச கல்வி வழங்குதல்.
- இலவச மருத்துவ உதவிகள் செய்தல்.
- இளைஞர்களிடையே தேசிய உணர்வை வளர்த்தல்.
- மக்களிடையே அன்பையும் மனித நேயத்தையும் பரப்புச் செய்தல்.

நித்திய அன்னதானம் கடந்த 4 ஆண்டுகளாக...

*"அன்ன சத்திரம் ஆயிரம் அமைத்தலை விட*
*ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் சிறப்பு"*

## வாழ்க ! முகவரி பவுண்டேஷன் !

வாழ்ந்தால் வாழ்வாங்கு வாழ வேண்டும் ! பிறருக்கு பயனுள்ள வகையில் வாழ வேண்டும் ! வீடு போற்ற வாழ வேண்டும் ! நாடு போற்ற வாழ வேண்டும் !

இவை அனைத்திற்கும் முத்தாய்ப்பாய், எளிமையாய், தன்னை விளம்பரப்படுத்தாமல், அமைதியாய், ஆனந்தமாய், உண்மையாய், உற்சாகமாய், சமுதாயப் பணியை, மலர்ச்சியாய், நெகிழ்ச்சியாய் செய்து வரும் சென்னை, வேளச்சேரி மனிதநேயம் கொண்ட சைதை துரைசாமி அவர்களின் அம்மா மண்டபத்தில் இயங்கும் **முகவரி பவுண்டேஷனையும்,** நிர்வாகத்தையும், குறிப்பாக திரு. இரமேஷ் அவர்களையும், தீபம் அறக்கட்டளை மனதாரப் பாராட்டி, வாழ்த்துகிறது, மகிழ்கிறது.

'கற்றவரை கற்றாரே அறிவர்' என்பது போல், முகவரி பவுண்டேஷன் பணியை, கஷ்டங்களை, உழைப்பை, சமுதாய அக்கறையை, தீபம் அறக்கட்டளை நன்கு உணர்கிறது. கலியுகத்தில், தர்மம் குறைவு ; அதர்மம் அதிகம், நீதி பெறுவது கடினம், சுயநலம் மிகுந்த உலகில், பொது நலவிரும்பிகள் குறைவு. அனைத்து திறமைகளையும் ஒருங்கே பெற்று, பலநூறு கிராமப்புற, நகர்புற ஏழை எளிய மாணவ, மாணவிகளை தேர்வு செய்து, பல்வேறு துறைகளில் வல்லுநர்களாக்கி, வலிமையான பாரதம் உருவாக வழிகோலும் முகவரியை நாம் வணங்குகிறோம்.

It is heartening to know that **MUGAVARI** extends its helping hand to so many MBBS... so many PhD... so many Civil Service... so many B.E Students. Really Great Service ! பல நூறு ஆதரவற்றோருக்கு சமுதாய முகவரி தந்த / தந்துகொண்டிருக்கும் **முகவரியை** மனதார வாழ்த்துகிறோம் !

வாழ்க உங்கள் நிறுவனம் ! வாழ்க உங்கள் நிர்வாகம் ! வாழ்க உங்கள் மாணவச்செல்வங்கள் ! வாழ்க உங்கள் சமுதாய உண்மைப்பணி ! வாழ்க உங்கள் நிதியாளர்கள் ! வாழ்க உங்கள் நலம்விரும்பிகள் !

வாழ்க உங்கள் தொண்டு ! வாழ்க நம் சமுதாயம் ! வாழ்க பாரதம் !

நல்வாழ்த்துகளுடன்,
என்றும் மனித நேயப்பணியில்

**தீபம் பாலா**
நிறுவனர்

நாள் : 27-08-2013

**தர்மம் செய்வோம்! தயவுடன் வாழ்வோம்!!**

**THIS BODY IS TO SERVE OTHERS**

உடல் என்ற எல்லையைக் கடக்கிற வரையில் ஒருமை நிலைக்கு வாய்ப்பே இல்லை!
- சத்குரு

இளைஞர் நல அமைப்பு



"முகவரி" - முகவரி இருந்தால் மட்டுமே ஒரு வீட்டை சரியாக சென்று அடைய முடியும். அதுபோல எண்ணற்ற மாணவர்களை அவர்களின் "லட்சியம்" என்கிற வீட்டினை அடைய வழி காட்டுகிறது "முகவரி" அமைப்பு

கடந்த பல ஆண்டுகளாக முகவரி அமைப்பின் மூலம் 200 மாணவர்களின் வாழ்வில் ஒளி ஏற்றி வைக்கபட்டுள்ளதை எண்ணி மகிழ்கிறேன். அந்த மாணவர்களுக்கு கல்வியை வழங்குவதன் மூலம் அவர்கள் குடும்பத்தின் வாழ்க்கைத்தரத்தையும் உயர்த்தி வருகிறது முகவரி அமைப்பு.

பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய மாணவர்களை கண்டறிந்து தேர்வு செய்து, முன்னணி கல்வி நிறுவனங்களில் கல்வி பயில அனுமதி வாங்கி கொடுத்து, தங்குவதற்கான இடம் வசதி அளித்து, நல்ல மனம் படைத்தோரை சந்தித்து அவர்களிடம் இருந்து உதவிகளை பெற்று, மாணவர்களுக்கு கல்வி ஒளி வழங்கி வரும் "முகவரி" அமைப்புக்கு உளங்கனிந்த பாராட்டுகளை தெரிவித்து கொள்கிறேன்.

இது போன்ற பல்வேறு பணிகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு தன்னுடைய கடுமையான உழைப்பின் மூலம் "முகவரி" அமைப்பை அடுத்த உயரத்துக்கு எடுத்து சென்று கொண்டிருக்கிறார் திரு. ரமேஷ் அவர்கள்.

இன்று தன்னை மட்டும் உயர்த்தி கொள்கின்ற மனிதர்கள் மத்தியில், தன்னை சார்ந்த சமுதாயமும் உயர வேண்டும் என்று நினைத்து செயல்பட்டு கொண்டிருக்கும் திரு. ரமேஷ் அவர்களின் உயரிய எண்ணம் மிகுந்த பாராட்டுக்குரியது.

நல்ல கல்வியால் மட்டுமே ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியும். தங்கள் அமைப்பு மாணவர்களுக்கு கல்வியை மட்டும் அளிக்காமல், ஒழுக்கத்தை வளர்க்ககூடிய யோகா, மனிதவள மேம்பாட்டு பயிற்சி பொன்றவற்றையும் சேர்த்து அளித்து சமூக அக்கறையுடன் கூடிய மாணவர்களை உருவாக்கி கொண்டிருப்பது மகிழ்ச்சியான ஒன்று.

எவ்வளவோ பணம் படைத்தவர்கள் மத்தியில், தங்களை போன்று நல்ல மனம் படைத்தவர்களும் இருப்பதை கண்டு பெரு மகிழ்ச்சி அடைகிறேன். தங்களின் அனைத்து முயற்சிக்கும், எங்களது "ஆனந்தம்" அமைப்பு அனைத்து வகையிலும் உதவி புரியும் என்று இந்த தருணத்திலே தெரிவித்து, தங்களின் அமைப்பு மென்மேலும் சிறப்பாக வளர எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

நன்றி . . .

வணக்கத்துடன் . . .

S. செல்வகுமார்
நிறுவனர் மற்றும் தலைவர்.
ஆனந்தம் இளைஞர் நல அமைப்பு

10-08-2013


**ஆனந்தம் இளைஞர் நல அமைப்பு**

15/21, பசுமார்த்தி தெரு 2 வது சந்து, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம். சென்னை - 24.

Ph: 45588555, Cell : 91-90423 35655, 95519 39551.

e-mail: anandhamfoundation@gmail.com info@anandham.org www.anandham.org


இச்சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டுவிடக் கூடாது என்ற அச்சத்தில், வாழ்க்கைக்கு எதிரான பல முடத்தனமான செயல்களை மனிதர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்!

\- சத்குரு

# எங்கள் பகுதியின் விடிவெள்ளி முகவரியே!

## ஆத்தூர் பகுதியின் சில முக்கிய பிரமுகர்கள்...

### ஒரு விதை விருட்சம் ஆகிறது



நான் தாகூர் கல்வி நிறுவனத்தின் நிர்வாகிகளுடன் ஒரு விஷேசத்திற்கு சென்று திரும்பும் போது ஓய்வு எடுத்து கொண்டு இருந்த இடத்தில் செயலர் நமது பள்ளியில் +2 படித்து நல்ல மதிப்பெண்கள் பெற்றிருந்த மாணவி இன்னும் பள்ளி கட்டணம் செலுத்தப்படாததால் அவருடைய T.C மார்க்சீட் எதுவும் கொடுக்கவில்லை என்றார். அதைப்பற்றி நான் விசாரித்த போது உண்மையில் அந்த மாணவி கட்டணம் செலுத்தும் நிலையில் இல்லை என்பதை அறிந்தேன்.

இதைப் பற்றி மற்ற உறுப்பினர்களிடம் கலந்து பேசி எந்த கட்டணமும் செலுத்த தேவையில்லை என கூறி அந்த மாணவியின் T.C மார்க் சீட்டை பெற்று செல்லுமாறு தெரியபடுத்தினேன். அந்த மாணவி அடுத்த ஆண்டு செங்கல்பட்டு மருத்துவ கல்லூரியில் MBBS சேர்ந்திருப்பதாகவும் என்னிடம் ஆசி பெற என் வீட்டிற்கு தன் தந்தையுடன் வந்தபோது நான் இல்லை என்று என் அப்பாவிடம் ஆசி பெற்று சென்றார். அந்த மாணவி தான் இன்று M.S படித்துவரும் கஸ்தூரி ஆவார். இவர்தான் முகவரியின் முதல் முத்தாகும்.

இந்த மாணவியை படிக்க வைக்க பலரிடமும் உதவி கேட்டுச் சென்றவர் தான் என் அன்பிற்குரிய முகவரி ரமேஷ் ஆவார். நல்ல திறமை இருந்தும் படிக்க வாய்ப்பு இல்லாத ஏழை மாணவ, மாணவிகளுக்கு விடிவெள்ளியாக இருக்கும் முகவரி பவுண்டேஷனுக்கு நாம் என்றும் துணை நிற்போமாக.

P.காளியப்பன், இயக்குனர், தாகூர் கல்வி நிறுவனங்கள், தேவியாக்குறிச்சி



As I know for some time now, MUGAVARI FOUNDATION was started in the year 2002, By a Selfless, Dedicated, Well Determined; Unassuming person belongs to our area "MUGAVARI RAMESH" to lend a Helping Hand for the most deserving and economically backward Students. Though he hails from a below income family, hence his visions are very very high, he contacts the GOODHEARTS in the Society for Financial Assistance & Help the needy ones. Now there are more than 200 Students who are assisted by Mugavari Ramesh to continue their Education in various fields like, PhD., Medicine, Engineering and So on.

This year I recommended a Student by name Mr. K. Gokulakrishnan, who is in II year MBBS, Coimbatore Medical College (A very poor boy) and MUGAVARI RAMESH with the help of some GOODHEARTS, has agreed to help the student till he continues his studies in the field of Medicine. The family members of Mr. Gokulakrishnan and I are Grateful to him & Pray the almighty to give him Good Health & Wealth required to continue his "IMPECCABLE SERVICES" to the Society.

With Best Wishes,
N. Anantha Krishnan, Managing Trustee & Member executive Committee,
"Gandhiji Gramodyogk Sangh Trust, "Sarvodaya", Attur.



எனது சொந்த ஊர் சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டத்தை சேர்ந்த வேம்பம்பூண்டி. எனக்கு முகவரி இரமேஷுடன் முன்பே அறிமுகம் இருந்தாலும், கடந்த 5 வருடங்களாக நெருங்கி பழகி வருகிறேன். அவர் ஊருக்கு வந்தால் பெரும்பாலும் அவருடன் இருப்பேன். ஊரில் மாணவர்கள் மற்றும் கொடையாளர்களை பார்க்க அவர் செல்லும் போது பல சமயங்களில் நானும் உடன் சென்றுள்ளேன், படிக்கும் வசதி இல்லாத மாணவர்களுக்காக இரமேஷ் தன்னை வருத்தி கொண்டு செய்யும் செயல் நான் இதுவரை பார்த்தறியாதது. அவ்வாறு அவர் நடந்து கொள்ளும் சில சமயங்களில் எனக்கு கோபமே வந்து விடும் தன்னைப்பற்றி கவலை படாமல் எதற்காக இப்படி பிறருக்காக வருத்திக்கொள்ள வேண்டுமென்று, இப்படித்தான் ஒரு முறை B.Ed படிக்கும் ஒரு பெண்ணின் கல்விக்காக இரவு 12 வரை நானும் அவரும் அலைந்து கொண்டிருந்தோம். அப்பெண் இன்று நல்ல வேலையில் உள்ளதை எண்ணும் போது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. நான் வாழ்நாள் முழுவதும் இரமேஷுடன் இருக்க வேண்டும். முகவரி மாணவர்கள் பலர் படித்து பெரிய அளவில் வரவேண்டும்.

S. செங்கநாதன், முக்கியஸ்தர், வேப்பம்பூண்டி

உங்கள் அனுபவங்களுக்கு விதி, தன்மானம், சுய கௌரவம், ரோஷம் என்று எதன் மீதாவது பழி சுமத்திக்கொண்டு இருக்கும் வரை, ஆனந்தத்தின் ருசியை நீங்கள் உணர வாய்ப்பில்லை!

- சத்குரு



கடந்த 5 ஆண்டுகளாக முகவரியைப் பார்த்து வருகிறேன். அதன் பிரம்மாண்ட வளர்ச்சியை ரசித்து வருகிறேன். சின்னஞ்சிறு கிராமத்திலிருந்து சென்னை சென்று மிகப் பெரிய சாதனைகளைச் செய்திருக்கும் முகவரி மாணவர்களை நினைத்துப் பெருமை கொள்கிறேன். ஒரு குழந்தையை உயர் கல்வி படிக்க வைப்பதே போராட்டமாக இருக்கின்ற இக்காலத்தில் 200 குழந்தைகளை படிக்க வைக்கிற முகவரி ஃபவுண்டேஷனின் முயற்சி பிரமிக்க வைக்கிறது.

முகவரியின் உயர்ந்த நோக்கமும், ஈசாவின் உணர்வும், நல்லவர்களின் நட்பும் முகவரியை முழு உயரத்திற்கு எடுத்து செல்லும் என்று மனதார நம்புகிறேன். உங்களின் நோக்கங்களுக்கும், செயல்களுக்கும் என்றும் உறுதுணையாக இருப்பேன் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

V. சஞ்சீவி, நிர்வாக இயக்குனர் – வளர்நிதி சிட்ஸ் பிரைவேட் லிமிடெட்
ஒருங்கிணைப்பாளர், ஈஷா யோகா மையம், ஆத்தூர்.



முகவரி மாணவர்களுக்கு எந்த உதவி கேட்டாலும் உடனடியாக செய்து கொடுக்கிறேன். என்னுடைய ஒன்றியத்திற்கு உட்பட்ட, சாத்தப்பாடி என்ற கிராமத்திலுள்ள, ஒரு முஸ்லிம் குடும்பத்தின் மாணவிக்கு மேற்படிப்பு படிக்க முகவரியிடம் சிபாரிசு செய்தேன். அந்த மாணவியின் தந்தைக்கு பக்கவாதத்தால் கால் பாதிக்கப்பட்டுள்ளது. முகவரி அந்த மாணவியின் படிப்பிற்கான முழு செலவையும் ஏற்றுக்கொண்டது. இன்று அந்த மாணவியும் படிப்பில் முதல் மாணவியாக திகழ்கிறாள். என்னுடைய முழு ஆதரவும் முகவரிக்கு உண்டு. முகவரி மேன்மேலும் வளர வாழ்த்துக்கள்.

P. இளங்கோவன், மாவட்ட கவுன்சிலர், முன்னாள் சேர்மன், தலைவாசல் ஒன்றியம்.



"முகவரி" ரமேஷ் எனக்கு பக்கத்து ஊர். ஏழை எளிய மாணவர்களின் படிப்பிற்காக முகவரி என்ற அமைப்பை ஏற்படுத்தி உதவி வருகிறார். நான் அரசியலில இருந்தாலும், முகவரிக்கு என்றும் உறுதுணையாக இருக்கிறேன். எங்கள் சுற்றுப்புற கிராமங்களில் முகவரியின் மூலம் நிறைய மாணவர்கள் படித்து வருகின்றனர். முகவரி மாணவன் என்றாலே, எங்கள் ஒன்றியத்தில் அனைவருக்கும் தெரிகிறது. மேலும் மதிப்பும், மரியாதையும் உண்டாகிறது. நிறைய கிராமப்புற ஏழை மாணவர்கள் மேற்படிப்பு படிப்பது, ஒன்றிய அளவில் புரட்சியை உண்டாக்கியுள்ளது. முகவரியின் மூலம் எங்கள் வட்டாரம் இந்திய அளவில் பேசப்படுவது எனக்கு பெருமையளிக்கிறது.

T. தன்ராஜ், ஒன்றிய கவுன்சிலர், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், தியாகனூர் புதூர்.



A few man can come up to help the needy people in the field of education. My heartful wishes to Mugavari Ramesh for his remarkable work towards the higher studies poor and talented children. Particularly many students are benifited in our area in Attur Taluk viz Arathi Agraharam, Veppampoondi, Kamakkapalayam, Talaivasal, Deviyakurichi, Aragalur, Periyeri, Sathapadi etc… So I wish him all success in his honest and selfless help towards education. I'm very proud to say that Ramesh was my student.

K.Shanmugam M.Sc., M.Ed., Principal & Correspondent,
Muthamizh Mat. Higher Secondary School, V. Kootroad

மாற்றங்கள்தான் வாழ்க்கையின் சுவாரஸ்யம்! மாற்றங்களைக் கண்டு நீங்கள் அச்சப்படத் தேவை இல்லை.
- சத்குரு



The Mugavari foundation is doing a commendable service in the realm of education by promoting the skill empowerment of hundred of youths from the dis-privileged background. My dear friend Mr. Ramesh works with admirable dedication to realize the long term goals of promoting change in the society and instilling positive attitude and energy in the minds of youngsters. I wish him grand success in this noble endeavor.

**Dr. P. KANAGARAJ** PhD

03-09-2013

Free IAS exam coach Based in Coimbatore

## செயல்கள் பேச வைக்கின்றன

'முகவரி' - இது
பதில் உதவி எதிர் பார்க்காத
ஓர் முதல் உதவி . . .

இறைவன் கொடுத்த உயிரும்
பெற்றோர் கொடுத்த உருவமும்
நம்முடன் வெகுநாட்கள் பயணிப்பதில்லை
நாம் உருவாக்கும் முகவரி மட்டுமே
நம் பயணம் முடிந்த பின்னும்
நம்மை பிரதிபலித்துக் கொண்டிருக்கும்..
அத்தகைய முகவரியை பிரதிபலன் எதிர்பார்க்காமல்
பலபேருக்கு 'முகவரி' பரிசளிக்கிறது...

சிலபேருக்கு முகவரி கொடுப்பதற்காக
பலபேரின் முகவரியை தேடியலைந்து
முகவரியின் பாதம் வாடிப்போனாலும்,

உதவி பெற்றவரின் முகம் மலர்வதை
பார்க்கும் பொழுது வாடிய பாதங்கள்
மீண்டும் ஓடுவதற்கு தயாராகுகிறது...

முதன்முதலில் ஒரு 'இயக்குனரால்'
செய்யப்பட்ட 'முதலுதவி'
ஒரு மாணவியின் டாக்டர் கனவை
உயிர்ப் பிழைக்கச் செய்தது..

பின்பு பல தூண்கள் முளைத்து
'முகவரி' க்கு தோள் கொடுத்து
பல மாணவர்களின்
கனவுகளுக்கு,
காட்சி வடிவம் கொடுக்கப்பட்டது . . .

உதவி வேண்டி
நாடி வரும் மாணவர்களின்
நாடி பிடித்துப் பார்த்து
கல்வி மருந்திட்டு
காய்ச்சல் போக்கி
ஆரோக்கிய வாழ்வை
அமைத்து தருவதே முகவரியின்
நோக்கம் . . .

வானவில் திட்டத்தின் மூலம்
புதிய மாணவர்களின்
எதிர்காலத்திற்கு
வர்ணம் தீட்டும் வாய்ப்பை,
பயனடைந்த மாணவர்களுக்கு
முகவரி கொடுத்து மகிழ்கிறது . . .

தன் செயல்களுக்காக
முகவரி என்றும் பேசியதில்லை
ஆனால்
அதன் செயல்கள்
'முகவரி' யைப் பற்றி பேச வைக்கின்றன. . .

- சந்திரகாந்த்
முகவரி மாணவர்

உங்களுக்குள் என்ன நடக்க வேண்டுமென்று உங்களைத் தவிர வேறு யாரும் தீர்மானிக்கக் கூடாது.
- சத்குரு

# முகவரி என்றும் ஒரு திறந்த புத்தகம்



| | |
|---|---|
| G.I.NO : | MUGAVARI FOUNDATION |
| P.A.NO :AADTM0079L | ARATHI AGRAHARAM, |
| WARD :W-11(3)/SLM | KANAKKAPALAYAM POST, |
| STATUS :A.O.P | ATTUR TALUK, |
| ASST.YEAR :2013-2014 | SALEM - 636 112 |
| DUE DATE :31/07/13 | |
| CASH SYSTEM | |

INCOME AND EXPENDITURE ACCOUNT FOR THE YEAR ENDED 31/03/13

| | | | |
|---|---|---|---|
| CHARITY | 1246299.00 | DONATION | 1248179.00 |
| OTHER EXPENSES | 28474.00 | DONATION-VANAVIL | 28799.00 |
| | | INTEREST RECEIVED | 357.00 |
| EXCESS OF INCOME OVER EXPENDITURE | 542.00 | | |
| | 1275335.00 | | 1275335.00 |

| DETAILS FOR CHARITY | | (DR) |
|---|---|---|
| EDUCATION EXPENSES FOR RURAL STUDENTS | | 1246299.00 |
| | TOTAL | 1246299.00 |

| DETAILS FOR OTHER EXPENSES | | (DR) |
|---|---|---|
| PRINTING & STATIONARY | | 2100.00 |
| NET CONNECTIVITY CHARGES | | 4000.00 |
| HOSTEL FUEL EXPENSES | | 7450.00 |
| ANNUAL DAY EXPENSES | | 10000.00 |
| COMPUTER MAINTENANCE | | 2318.00 |
| BANK CHARGES | | 2606.00 |
| | TOTAL | 28474.00 |

| DETAILS FOR INTEREST RECEIVED | | (CR) |
|---|---|---|
| SB INTEREST | | 357.00 |
| | TOTAL | 357.00 |

For MUGAVARI FOUNDATION
Founder - Cum - Managing Trustee
Trustee



| DETAILS FOR CORPUS FUND | | (CR) |
|---|---|---|
| CORPUS FUND | | 1563.00 |
| | TOTAL | 1563.00 |

| DETAILS FOR CASH IN HAND | | (DR) |
|---|---|---|
| CASH ON HAND | | 1497.00 |
| | TOTAL | 1497.00 |

| DETAILS FOR CASH AT BANK | | (DR) |
|---|---|---|
| SBI SB VANAVIL-32492239145 | | 49.00 |
| SBI SB-32053352840 | | 17.00 |
| | TOTAL | 66.00 |

CAPITAL ACCOUNT OF CORPUS FUND

| | | |
|---|---|---|
| OPENING CREDIT BALANCE | 1001.00 | |
| NET SURPLUS | 562.00 | |
| | 1563.00 | 0.00 |
| CLOSING CREDIT BALANCE | 1563.00 | |

BALANCE SHEET AS ON 31/03/13

| | | | |
|---|---|---|---|
| CORPUS FUND | 1563.00 | CASH AT BANK | 66.00 |
| | | CASH IN HAND | 1497.00 |
| | 1563.00 | | 1563.00 |

For MUGAVARI FOUNDATION
Founder - Cum - Managing Trustee
Trustee

முகவரி ஃபவுண்டேஷனின் வரவு செலவுகளை (1-4-2012 முதல் 31-3-2013 வரை) சேலம் ஆடிட்டர் ஜி.ரங்கநாதன் அவர்களால் தணிக்கை செய்யப்பட்டு மேனேஜிங் ட்ரஸ்ட்டி ரமேஷ் மற்றும் ட்ரஸ்ட்டி மங்களபுரம் சரவணன் அவர்கள் 18-4-2013 அன்று சேலம் வருமானவரி அலுவலகத்தில் தாக்கல் செய்தனர்.

முழு விழிப்பு உணர்வுடன் வாழ்ந்தால், வாழ்க்கையின் தேவைகளைச் சரியாக உணர்ந்து வாழ்வீர்கள். விழிப்பு உணர்வு இல்லாதபோதுதான் அதை போதனைகள், ஒழுக்க விதிகள், கொள்கைகள் என்று இட்டு நிரப்புகிறீர்கள்! - சத்குரு

# இது எங்கள் முகவரி

## ஆரத்தி அக்ரஹாரம் பொது மக்களில் சிலர்...

### மாணிக்கம்



கஸ்தூரி என்ற ஒரு மாணவியின் படிப்பிற்கு உதவ ஆரம்பித்தது, இன்று 200 மாணவர்கள் படிக்கிற பெரிய அமைப்பாக "முகவரி" வளர்ந்துள்ளது. அடிப்படையிலே, முகவரி ரமேஷ் வசதியில்லாத விவசாய குடும்பத்தை சார்ந்தவர். பிறருக்கு உதவும் ரமேஷின் குணங்கள் எனக்கு பிடிக்கும். முகவரி அமைப்பின் மாணவர்களுடன் பல நாட்கள் தங்கியுள்ளேன். முகவரி மாணவர்களின் பழகும் விதம், Sponsor-களை முகவரி அணுகும் முறை, மாணவர்களின் படிப்பிற்காக அலைந்து, திரிவது, போன்றவற்றின் பலனே இன்று ஆரத்தி அக்ரஹாரத்தில் மட்டும் சுமார் 50 மாணவர்கள் மேற்படிப்பு படித்து வருகின்றனர். இது ஊர்மக்களின் சார்பாகஎனக்குபெருமையளிக்கிறது.சாதிக்குஅப்பாற்பட்டு, பாடுபட்டு கல்விக்கு உதவும் முகவரிக்கு, நான் இன்றும், என்றும் உதவியாக இருப்பேன்.

### பரமசிவம்



நான் ஒரு பள்ளி ஆசிரியர். முகவரி மாணவர்களை நான் நன்கு அறிவேன். உரிய வழிகாட்டுதலும், பொருளாதார வசதியும் இல்லாத திறமையான மாணவர்களின் படிப்பை தொடர முகவரி பவுண்டேஷன் உதவுகிறது. என்னை பொறுத்த வரையில் இந்த அமைப்பு, மாணவர்கள் மனதால், முடியாது என்று நினைத்து இருப்பதை, "முடியும்" என்ற அளவில் மாணவர்களை சாதிக்க வைக்கிறது. மகனை படிக்க வைக்கிற தந்தை, தன் மகனின் மேற்படிப்பிற்கு படித்தவர்களிடம் ஆலோசனை கேட்கும் போது, "உன்னால் உன் மகனை படிக்க வைக்க முடியாது என்று கூறினால், அந்த மாணவனின் படிப்பு அஸ்தமனமாகிவிடும். ஆனால் எங்கள் ஊரில் டாக்டர், IAS என பலதுறைக்கு மாணவர்கள் உருவாகி வருகின்றனர். மேலும் Ph.D படிப்பை உலக தரம் வாய்ந்த பல்கலைகழகங்களில் எங்கள் ஊரிலிருந்து மட்டும் 5 பேர் படிப்பது குறிப்பிடத்தக்கது. ஆலோசனை, படிப்பு, வழிகாட்டுதல், பண உதவி இவை அனைத்துப் பணியிலும் முகவரி பணி தொடர மனமார வாழ்த்துகிறேன்.

### ராதா



நான் ஆரத்தி அக்ரஹாரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு ரமேஷை சிறு வயது முதலே நன்றாக தெரியும். எல்லோரிடமும் நன்றாக பழகும் ரமேஷ், உடல் ஊனமுற்றோர், பார்வை தெரியாதவர்களிடம் மிகுந்த அக்கறை கொள்வார். நல்ல குணங்கள் பல கொண்ட ரமேஷ், "முகவரி" என்ற அமைப்பின் மூலம் நிறைய மாணவர்களின் கல்விக்கு உதவி வருவது என்பது எதிர்பாராத நல்ல விஷயமாகும். முகவரியின் வாயிலாக வசதியில்லாத மாணவர்கள் மேற்படிப்பை தொடர வேண்டுகிறேன்.

### செல்லமுத்து



எங்கள் ஆரத்தி அக்ரஹாரம் கிராமத்தில் நிறைய பேர் இன்று படித்து வருகின்றனர். இது எங்கள் சுற்றுவட்டார கிராமங்களில் ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது. இதற்கு காரணம், முகவரி பவுண்டேஷன் என்ற அமைப்பாகும் முகவரி பவுண்டேஷனை நான் நன்கு அறிவேன். 7 ஆண்டுகளுக்கு முன்பு, என்னுடைய மகனின் மேற்படிப்பிற்காக, முகவரியை அணுகிய போது, முகவரி மாணவர்கள் ஒரே இடத்தில், ஒற்றுமையாக, சாப்பிட்டு படித்து வருவதை கண்டு, ஆச்சரியமும், மகிழ்ச்சியடைந்தேன். முகவரி அமைப்பை பயன்படுத்தி நிறைய மாணவர்கள் படிக்க ஆசைப்படுகிறேன்.

உங்கள் வாழ்க்கை உங்களுக்கு நிறைவு தருவதாக இல்லை.
எனவே, உங்கள் வாழ்க்கையை உங்கள் குழந்தை மூலம் வாழ முயற்சிக்கிறீர்கள்!

- சத்குரு

**முத்துசாமி**



எங்கள் ஊரில் ரமேஷ் என்பவர்“முகவரி”என்றஅமைப்பை ஆரம்பித்து, வசதியில்லாத திறமை யான மாணவர்களுக்கு மேற்படிப்பு தொடர உதவுகிறார். முகவரியானது மாணவர்களிடம் மனப்பக்குவத்தை உண்டாக்கி, பிறருக்கு உதவும் தன்மையை ஏற்படுத்துகிறது. முகவரி மாணவர்களின் படிப்பிற்காக பல பெரிய மனிதர்களை சந்தித்து, அவர்களின் உதவியை மாணவர்களுக்கு பெற்றுதருகிறது. இத்தகைய தன்மையுள்ள, முகவரியில் எனது மகளும் படிப்பது எனக்கு பெருமையளிக்கிறது. முகவரியின் பணி சிறக்க வாழ்த்துகிறேன்.

**ராமசாமி**



ரமேஷை எனக்கு சிறு வயது முதலே தெரியும். முதன் முதலில் கஸ்தூரி என்ற மாணவிக்கு உதவ ஆரம்பித்து இன்று 200 மாணவர்களுக்கு கல்வி உதவி செய்வது, எங்கள் ஊரின் சார்பாக எங்களுக்கெல்லாம் பெருமை. இதற்காக ரமேஷ் படும் கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல, வார்த்தைகளில் சொல்ல முடியாது. இன்று ஏழை எளிய மாணவர்கள் MBBS, IAS படிப்பது என்பது சாத்தியமில்லாதது. முகவரியில் படிக்கும் மாணவர்கள் IAS ஆகி, கிராமப்புற ஏழை மாணவர்களுக்கு உதவவேண்டும் என்பது எனது ஆசை. ஏழை எளிய மாணவர்களுக்கு கல்வி மிக மிக முக்கியம் என்பதை உணர்ந்து முகவரி செயல்படுகிறது. முகவரி ரமேஷ் தனக்கென்று ஏதும் செய்து கொள்ளாமல், மாணவர்களின் நலனுக்காகவே வாழ்கிறார். எனது மகனும் முகவரியின் மாணவனாக இருப்பது எனக்கு பெருமையளிக்கிறது. கிராமத்து ஏழை, எளிய மாணவர்கள் முகவரியை அணுகி உதவி பெற்று வாழ்க்கையில் முன்னேற வாழ்த்துகிறேன்.

**பாண்டியன்**



நான் ஆரத்தி அக்ரஹாரம் கிராமத்தில் வசிக்கிறேன். என்னுடைய காலத்தில் நானும், மற்றவர்களும், படிக்க பள்ளிக்கு சென்றதில்லை. எனவே நான் கல்வியின் தேவையை நன்கு அறிவேன். முகவரி பவுண்டேஷன் எனது ஊரில் 50-க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு படிப்பிற்கு உதவி செய்கிறது. குடும்பத்தில் ஒரு குழந்தையை படிக்க வைப்பதற்கே பெரும் பாடாகிறது. ஆனால் “முகவரி” இத்தனை மாணவர்களுக்கு படிப்பிற்கு உதவுவது பிரமிப்பை ஏற்படுத்துகிறது. முகவரியில் பயிலும் எனது மகன் பல்வேறு சமூக சமய மாணவர்களுடன் பழகுவது, முகவரியின் எல்லா சமூக மக்களையும் “கல்வி” என்ற குடையின்கீழ் ஒன்றிணைப்பதை காட்டுகிறது. முகவரி மேலும் பல நிலைகளை எட்ட ஆண்டவனை வேண்டுகிறேன்.

## முகவரி

இவ்வுலகில் உள்ள ஒவ்வொரு உயிருக்குள்ளும் மனித நேயம் உள்ளது. ஒரு சரியான சூழ்நிலையை உருவாக்குவதன் மூலம் யாரொருவரிடமும் மனித நேயத்தை தூண்டிவிட முடியும். அவ்வாறு தூண்டிவிடப்பட்ட மனித நேயமே, தூண்டிவிடப்பட்டவர்களுக்கு முகவரியாய் அமையும். அப்படிபட்ட முகவரியை ஒவ்வொரு மாணவர்களிடமும் உயர்கல்வியின் மூலம் உருவாக்குவதே முகவரியின் நோக்கமாகும்.

மற்றவர்களை மாற்ற வேண்டும் என்று நீங்கள் சொன்னால், அங்கே மோதல்தான் தொடங்கும்.
நீங்கள் மாறுவதாய் இருந்தால்தான் உண்மையான மாறுதல் ஏற்படும்!

- சத்குரு

# பாதச்சுவடுகள்

என் பெயர் ரமேஷ். சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டத்தைச் சேர்ந்த ஆரத்தி அக்ரஹாரம் என்ற சிறிய கிராமமே எனது சொந்த ஊர். என் பெற்றோர் விவசாயக் கூலி வேலை செய்து வந்தனர். என்னுடன் பிறந்தவர்கள் ஓர் அக்கா, ஒரு தம்பி.

நான் நாமக்கல் அரசு கலைக்கல்லூரியில் B.Sc. (Maths) படித்துவிட்டு C.A. படித்து ஆடிட்டர் ஆக வேண்டும் என்ற லட்சியத்தின் பேரில் அட்வகேட் மாசிலாமணி அறிமுகத்தின் மூலம் சேலம் G. ரங்கநாதன் ஆடிட்டர் அலுவலகத்தில், சுரேஷ் ஆடிட்டரின் கீழ் பயிற்சி செய்து வந்தேன். இந்த சமயத்தில் என் அக்கா இதயநோய் காரணமாக இறந்தது என்னுள் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது. பின்னர் மார்ச் 2002-ல் எங்கள் ஊரைச் சேர்ந்த கஸ்தூரி என்ற மாணவி +2வில் 1136 மதிப்பெண்கள் பெற்று MBBS படிக்க ஆசைப்பட்டார். +2வில் நல்ல மதிப்பெண் பெற்றிருந்தும் நுழைவுத்தேர்வு மதிப்பெண் குறைவாக இருந்ததால் அப்போது MBBS கிடைக்கவில்லை. ஆனால் MBBS படிக்க வேண்டும் என்ற கஸ்தூரியின் ஆர்வமும் என் அக்காவின் இறப்பு, என்னுள் ஏற்படுத்திய பாதிப்பும் இணைந்து எப்படியாவது அப்பெண்ணை மருத்துவராக்கி விட வேண்டும் என்ற தீர்மானத்தை என்னுள் ஏற்படுத்தியது.

கஸ்தூரிக்கு அடுத்த ஆண்டு நுழைவுத்தேர்வு எழுத பயிற்சி வகுப்பிற்கு செல்ல என்னுடைய சகோதரர் S.K. லட்சுமணன் உதவினார். கஸ்தூரியும் நன்றாகப் படித்து அடுத்த நுழைவுத் தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்று மாநிலத்திலேயே 3வது மாணவியாக தேர்ந்தார். MBBS படிக்க வாய்ப்பும் கிடைத்தது, என்றாலும் MBBS சேர்க்க ஆகும் செலவிற்காக பலரிடம் உதவி கேட்டுக் சென்றேன். அப்போது ரமணா திரைப்படம் வெளிவந்திருந்த நேரம். அந்த திரைப்படம் ஏற்படுத்திய தாக்கத்தால் அத்திரைப்படத்தின் இயக்குநரான A.R. முருகதாஸ் அண்ணாவை 24.06.2003 அன்று தான் முதன் முதலாக சந்தித்து உதவி கேட்டோம். அவரின் அணுகுமுறை எங்களுக்கு நம்பிக்கையை கொடுத்தது. இவ்வாறு முதன்முதலாக ஒரு மாணவி படிக்க உதவியதன் மூலம் பின்னர் முகவரி என்ற அமைப்பு உருவாக விதை போட்டவர் A.R. முருகதாஸ் அண்ணனே. அவருக்கு வாழ்நாள் முழுவதும் நான் நன்றிகடன் பட்டுள்ளேன். அண்ணா முகவரி பற்றி பேசும் ஒவ்வொரு சமயத்திலும் உன் திருமணத்தை தள்ளிப்போடாதே, விரைவில் திருமணம் செய் என அக்கறையாக சொல்லுவார். அவரின் குரல் கேட்கும்போதெல்லாம் எனக்குள் ஒரு Positive Energy இருக்கும். அவர் அற்புதமான மனிதர் மட்டுமல்லாமல் என் உடன் பிறவா சகோதரராகவே உள்ளார். அவரின் தொடர்பு கிடைத்ததை நான் பெரும்பேறாகவே நினைக்கிறேன்.

ஓர் ஏழை மாணவியின் மருத்துவர் ஆக வேண்டும் என்ற கனவை நிறைவேற்ற உதவியது, நேர்மையாக முயற்சி செய்தால் உதவி செய்யும் உள்ளங்கள் பல உள்ளன என்ற உண்மையை எனக்கு உணர்த்தியது. அதன் பிறகு மேலும் சில மாணவர்கள் எங்கள் ஊரில் இருந்து உதவி வேண்டி வர ஆரம்பித்தனர். அப்போது எனக்கு வயது 25. நான் C.A. தேர்வுக்கு தயார் செய்து கொண்டிருந்தேன். என் வாழ்க்கைக்கான வலுவான அடித்தளத்தை அமைத்துக் கொண்டிருக்க வேண்டிய காலம். ஆனால் உதவி கேட்டு வரும் மாணவர்களிடம் என்னால் மறுப்பு சொல்ல முடியவில்லை. அந்த சமயத்தில் ஓர் அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் எதுவும் எனக்கு இல்லை. அதே சமயத்தில் உதவவில்லை என்றால் அவர்களின் எதிர்காலம் வீணாகி விடுமே என்பதால் அவர்களுக்கான உதவி தேடி ஓட ஆரம்பித்தேன். அப்போது தான் MBBS படிக்க உதவி கிடைப்பது போல் எல்லா படிப்புகளுக்கும் உதவி கிடைக்காது என்ற உண்மை எனக்குப் புரிந்தது. என்றாலும் பல்வேறு சிரமங்களுடன் என்னால் முடிந்த உதவி பெற்றுக் கொடுத்து வந்தேன்.

இந்த சமயத்தில்தான் இதனை ஓர் அமைப்பாக முறையாக எடுத்துச் சென்றால் மேலும் பல மாணவர்களுக்கு உதவ முடியும் என்ற எண்ணம் எனக்குத் தோன்றியது. தொடர்ந்து, இதற்காக நான் மேற்கொண்ட முயற்சியில் என் C.A. கனவு தடைப்பட்டது. பொருளாதார நெருக்கடிகளும் சேர்ந்து கொள்ள, நான் மிகுந்த மன அழுத்ததிற்கு உள்ளானேன். அதிலிருந்து என்னை மீட்டெடுத்துக் கொண்டு வர ஈஷா யோகா எனக்கு உதவியது. சத்குருவை சந்திக்காமல் இருந்திருந்தால் இக்கட்டுரையை எழுத முடியாமல் என் வாழ்க்கை திசைமாறி போயிருக்கும். என்னை சரியான வழியில் என் கையை பிடித்துச்சென்று, எனக்கான பாதையை காட்டும் என் குரு சத்குருவே ஆவார். அவர் வாழும் காலத்தில் நான் இருப்பது என் பாக்கியமே. முகவரியில் உள்ள மாணவர்கள் ஈஷா யோகா கற்று பயன்பெற்று வருகின்றனர். ஈஷாவின் தியானலிங்கம் கோவிலில் மனஅமைதி பெற்றுத் திரும்பும் ஒரு சமயத்தில் தான் முகவரி என்ற பெயர் என் மனதில் உதித்தது. அக்டோபர் 15, 2006ல் உதவிபெற்ற ஏழு மாணவர்களுடன் சென்னை காந்தி மண்டபத்தில் முகவரி என்று பெயர் வைத்தோம்.

இந்த காலகட்டத்தில் மங்களபுரம் சரவணன் அண்ணா, கோவிந்தராஜ் அண்ணா, அட்வகேட் மாசிலாமணி, துரை அண்ணா (Texsas Tech), லட்சுமணன் ஐயா (Lena Steels), தாகூர் காளியப்பன், அகரம் பரமசிவம் அண்ணா, நாமக்கல் S.R. ஜவஹர், ஆடிட்டர் பத்மநாபன், பாலம் கலியாணசுந்தரம் ஐயா ஆகியோர் முகவரிக்கு பக்கபலமாகவும், முகவரியின் கஷ்டமான காலத்தில் எப்போதும் என்னுடன் இருந்தனர். குறிப்பாக பாலம் கலியாணசுந்தரம் ஐயா எனக்கு மிகவும் ஊக்கமளித்தார். அவரிடம் முகவரி என்று பெயர்

உங்கள் அனுபவத்தில் இல்லாதது எதுவாக இருந்தாலும், அதை உண்மை என்று முழுமையாக நம்புவது எப்படி முட்டாள்தனமோ, அதே போல் அதை பொய் என்று ஒதுக்குவதும் அதே அளவு முட்டாள்தனம்தான்!

\- சத்குரு

வைத்ததைச் சொன்னபோது மிகவும் மகிழ்ந்து 'முகவரி ரமேஷ்' என்று முதன்முறையாக அழைத்தார். அதுவே நிலைத்துவிட்டது. இவ்வாறு 2007ம் ஆண்டின் மத்தியில் முகவரி ஓர் அமைப்பாகி அதன் மூலம் 30 மாணவர்கள் பயனடைந்திருந்தனர்.

அப்போது நாங்கள் வேளச்சேரி தண்டீஸ்வரத்தில் ஒரு வீடு வாடகைக்கு எடுத்து தங்கி இருந்தோம். முகவரியை நம்பி மாணவர்கள் பலர் வந்த போதும் அனைவருக்கும் உதவி பெற்றுத்தர முடியாத நிலை. நாங்கள் தங்கியிருந்த வீட்டுக்கே வாடகை கொடுக்க முடியாத அளவுக்கு பொருளாதார நெருக்கடி. எனக்கென எதுவும் செய்து கொள்ளாததால் என்னுடைய குடும்பத்திலும் எனக்கு பிரச்சனை. இந்த நெருக்கடிகளின் உச்சத்தை சமாளிக்க முடியாமல் முகவரியை விட்டுவிடலாம் என்று ஆகஸ்ட் 31, 2007 அன்று முடிவுக்கு வந்தேன். இதை முகவரி மாணவன் வெற்றிவேலிடம் சொன்னேன். அதற்கு வெற்றிவேல் "உங்களுடைய இயல்புக்கு முகவரியே சரியாக இருக்கும். C.A. படிக்கவும் அந்த தொழிலை செய்யவும் நிறைய பேர் வருவார்கள். ஆனால் இந்த செயல் செய்ய உங்களை போன்றவர்களால்தான் முடியும். உங்களுக்கு இது கடினமான பாதைதான். ஆனால் நிறைய மாணவர்கள் பயனடைவார்கள். தயவு செய்து முகவரியை விட்டு விடாதீர்கள்" என்று கூறினார். நான் அந்த வார்த்தைகளை ஏற்றுக்கொண்டேன். வெற்றிவேல் யோசனை சொன்னதோடு மட்டுமல்லாமல், எல்லா செயல்களையும் முன் நின்று செய்து முகவரி இன்று சரியான பாதையில் செல்வதற்கு காரணமே அவர்தான். அவருடன் அவர் மூலம் முகவரிக்கு வந்த பூபதிராஜாவும் உறுதுணையாக உள்ளார். இவர்கள் இருவரும் முகவரியின் இரு கண்களாக உள்ளனர்.

செப்டம்பர் 1, 2007லிருந்து முழுக்க முழுக்க முகவரியை மட்டுமே பார்க்க ஆரம்பித்தேன். மெல்ல மெல்ல முகவரிக்கு பல கதவுகள் திறந்தன. அக்டோபர் 4, 2007ல் மனிதநேயர் சைதை துரைசாமி அவர்களை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. வேளச்சேரியிலுள்ள அவருடைய திருமண மண்டபத்தின் அருகில் இருக்கும் அறையை முகவரி மாணவர்கள் தங்கிக் கொள்ள அனுமதித்ததுடன் அவர்களின் உணவுக்கான செலவையும் ஏற்றுக்கொண்டார். சரிவில் சென்று கொண்டிருந்த முகவரியைக் காப்பாற்றி, முகவரிக்கு ஒரு முகவரி கொடுத்தார். அன்றிலிருந்து இன்று வரை நான் உண்ணும் உணவு கூட அவர் அளிப்பது தான். தங்க இடம், உண்ண உணவு இரண்டும் எனக்கு சரியாக கிடைத்ததால்தான், முகவரியின் செயல்பாடுகளை சரியான திசையில் அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்ல முடிகிறது. இதற்கு காரணம் என்னை தன் மகனைப் போல் பாவிக்கும் மேயர் மனிதநேயர் சைதை துரைசாமி ஐயா அவர்கள். அதே போல் இன்றுவரை கௌரி அக்கா, சுசீந்தரா அக்கா, வாவிபாளையம் சுந்தரமூர்த்தி அண்ணா மற்றும் என் தாய் பட்டத்தாள் அவர்கள் தான், என் தனிப்பட்ட செலவுகளுக்கான பணத்தை நான் கேட்காவிட்டாலும் எனக்கு கொடுத்துவிடுவார்கள். இவர்கள் என் மீதும், முகவரி மீதும் எப்போதும் அக்கறையாக இருப்பார்கள்.

மார்ச் 23, 2009ல் சூரியன் ஃபார்மா R.கிருஷ்ணமூர்த்தி அண்ணா அவர்களை கள்ளக்குறிச்சி வெற்றி லாட்ஜில் முதன் முதலாக சந்தித்தேன். அந்த யதார்த்தமான சந்திப்பினால்தான் இன்று அவர் குடும்பத்தில் ஒருவனாக உள்ளேன். பல முகவரி மாணவர்களுக்கு தொடர்ந்து அன்போடு உதவி வரும் அவர் முகவரியை அடுத்த பரிணாமத்திற்கு கொண்டு சென்றார். அவர் தன் அனுபவங்களை என்னுடன் பகிர்ந்து உன் தனித்தன்மையை எப்போதும் இழந்துவிடாதே அதுதான் உன் பலம் என்பார். சேலம் பாலாஜி குரூப்ஸ் சேர்மன் வைத்தியலிங்கம் ஐயா அவர்கள் முகவரியை எப்போதும் தன்னுள் ஒரு பாகமாகவே நினைப்பார். அவர் நிறைய உதவும் உள்ளங்களிடம் முகவரியை அறிமுகப்படுத்தி வைக்கிறார். நான் எப்போது சென்று சந்தித்தாலும் S.R.M. பல்கலைகழக வேந்தர் Dr. T.R. பச்சமுத்து அவர்கள் இன்முகத்துடன் வரவேற்று நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டு முகவரி மாணவர்கள் அவர் பல்கலைக்கழகத்தில் படிக்க உதவி செய்துள்ளார். பெருந்துறை உலகநாதன் ஐயா கடந்த 4 வருடங்களாக முகவரிக்கு முகம் தெரியாமல் உதவி வருகிறார். இப்போதுதான் எங்கள் அன்புக்காக எங்களைப் பார்த்தார். இவர்களைப் போலத்தான் முகவரிக்கு உதவும் எல்லா நல்ல உள்ளங்களுடன் முகவரியின் உறவு அற்புதமானதாக உள்ளது.

ஒவ்வொரு கல்லாக வைத்து வீட்டைக் கட்டுவது போல ஒவ்வொரு நபரையும் பார்த்து பார்த்து உதவி பெற்று முகவரியை உருவாக்கியுள்ளோம். அதோடு நில்லாமல் அவர்களுடன் முகவரிக்கு நல்ல பிணைப்பையும் ஏற்படுத்தி வருகிறோம். இன்று முகவரிக்கு 90 புரவலர்கள் உதவி வருகின்றனர். 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன் பெற்றுள்ளனர். முகவரி மாணவர்கள் சிலர் வெற்றிகரமாக வெளிவந்துள்ளனர். முகவரியின் முதல் மாணவி கஸ்தூரி M.S Opthalmology சென்னை மருத்துவ கல்லூரியில் பயின்று வருகிறார். M.பூபதிராஜா 2012 UPSC சிவில் சர்வீஸ் தேர்வில் வெற்றி பெற்று லக்னோவில் IRTS பயிற்சியில் உள்ளார். A. ரகுபதி உலக அளவில் பெயர் பெற்ற தைவான் NTHU பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி படிப்பு மேற்கொண்டு வருகிறார். ஒரு மாணவி TNPSC குரூப் 1 தேர்வு பெற்று மாவட்ட பதிவாளராக (DR) பயிற்சி பெற்று வருகிறார். 5 மாணவர்கள், TNPSC குரூப் 2 தேர்வாகி வெவ்வேறு இடங்களில் பணிபுரிந்து வருகின்றனர். 21 மாணவ / மாணவிகள் அரசு மருத்துவ கல்லூரியில் பயின்று வருகின்றனர். 17 மாணவ / மாணவிகள் அண்ணா பல்கலைகழகத்தில் பயின்று வருகின்றனர்

நீதியரசர் V.ராமசுப்ரமணியம், முன்னாள் தலைமை தேர்தல் ஆணையர் T.S.கிருஷ்ணமூர்த்தி IRS, T.பிச்சாண்டி IAS, T.K.ராஜேந்திரன் IPS, V.நந்தகுமார் IRS, SR.காந்தி IRPF, முன்னாள் குடியரசுத்தலைவர் அப்துல்கலாம் அவர்களின் அறிவியல் ஆலோசகர் V.பொன்ராஜ், புதியதலைமுறை Managing Director R.P.சத்தியநாராயணன், தமிழருவி மணியன், நல்லோர்வட்டம் பாலசுப்பிரமணியன், எண்ணங்களின் சங்கமம் J.பிரபாகரன், மற்றும் Prime Point சீனிவாசன் போன்றவர்களின் வழிகாட்டுதல் முகவரிக்கும், முகவரி மாணவர்களுக்கும் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

தொடக்கத்தில் எங்கள் கிராமத்தில் இருக்கும் மாணவர்களுக்கு மட்டும் உதவியதால் இன்று எங்கள் கிராமத்திலிருந்து மட்டும் 54 மாணவர்கள் பல்வேறு துறைகளில் உயர்கல்வி படித்து வருகின்றனர். இதில் மாணவிகளும் சமஅளவில் படித்து வருவது குறிப்பிடத்தக்கது. 5 மாணவர்கள் Ph.D. ஆராய்ச்சி படிப்பு மேற்கொண்டு வருகின்றனர். பின்னர் படிப்படியாக சுற்று வட்டாரங்களிலிருந்து மாணவர்கள்

வாழ்க்கை என்பது மிகவும் சிறிய ஒரு நிகழ்வு. அது நிகழ்வு என்பதை நீங்கள் அறிவதற்குள் அது முடிந்துவிடும். ஆகவே, உங்களுக்குள் ஆன்மிகத் தேடல் எழுந்தால், அது இப்போதே நிகழட்டும்!

\- சத்குரு

முகவரிக்கு வர ஆரம்பித்தனர். புதிய தலைமுறை, ஆனந்தவிகடன் போன்ற பிரபல வார இதழ்களில் முகவரி பற்றிய கட்டுரைகள் வந்ததால் தற்போது தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலிருந்தும் முகவரிக்கு மாணவர்கள் வர ஆரம்பித்துவிட்டனர். 2013–2014ஆம் கல்வி ஆண்டில் மட்டும் முகவரிக்கு 94 புதிய மாணவர்கள் விண்ணப்பித்தனர். அவர்களில் 40 மாணவர்களை மட்டும் முகவரியின் பழைய மாணவர் குழு தேர்ந்தெடுத்தது.

முகவரியின் வளர்ச்சியை எண்ணி மகிழும் இந்த தருணத்தில் முகவரி வளர உதவிய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன். இவை நிகழ நான் ஒரு கருவியாக இருந்ததைத் தவிர வேறு எதுவும் செய்யவில்லை என்றே நான் நம்புகிறேன். என் அப்பாவின் கடின உழைப்பும் வெகுளித்தனமும், என் அம்மாவின் தியாகமும் நேர்மையும், என் அக்காவின் அன்பும் பாசமும், என் தம்பியின் அக்கறையும் இரக்க குணமும் என் வளர்ப்பின் மீது எனக்குள் ஏற்படுத்திய தாக்கமே, இவற்றுக்கெல்லாம் அடிப்படையாக அமைந்தது. என்னுடன் பல விஷயங்களில் கருத்து மாறுபாடு கொண்டிருந்தாலும் கடந்த 14 வருடங்களாக எனக்கு பக்கபலமாக இருந்து வரும் என்னைப் புரிந்துக்கொண்ட என் கல்லூரி நண்பர் ஜெய்சங்கரின் ஊக்கமும் முகவரியின் வளர்ச்சிக்கு உதவியது. மேலும் என் தம்பிகளான வெற்றிவேலின் எப்படிப்பட்டவரையும் ஏற்றுக்கொள்ளும் பண்பும், பூபதிராஜாவின் எதையும் தாங்கிக்கொள்ளும் பக்குவமும், ரகுபதியின் யாரையும் காயப்படுத்தாத குணமும், சிவக்குமாரின் அர்ப்பணிப்புடன் கூடிய ஈடுபாடும், என் தங்கை பானுப்ரியாவின் பிறருக்கு உதவும் இயல்பும் என முகவரி மாணவர்கள் ஒவ்வொருவரிடமும் நான் பார்க்கும் பண்புகள் மேலும் பல மாணவர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்திற்கு வலுவூட்டுகின்றன. இவர்களுடன் மற்ற முகவரி மாணவர்கள் தொடர்ந்து செலுத்தி வரும் ஈடுபாடே முகவரி வளர்ந்து, கிளைத்து, செழிப்பதற்கு காரணம். எல்லாவற்றையும்விட என் அப்பா படிக்காதவர். 1975–ம் ஆண்டு வாக்கில் என் தாய்மாமா படிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டதை என் அப்பா மிகவும் சிரமப்பட்டு அவரை படிக்க வைத்துள்ளார். அவர் தற்போது Engineer –ஆக உள்ளார். என்னை என் அப்பா என் போக்கிலேயே வளர்த்தார். நான் பொருளாதாரத்தில் தன்னிறைவு பெறவில்லை என்ற வருத்தம் அவருக்கு இருந்தாலும் என் மனசு எந்தவிதத்திலும் காயப்படக்கூடாது என்பதில் மிகவும் தெளிவாக இருந்தார். காரணம் கல்வியின் முக்கியத்துவத்தை அறிந்திருந்தார். இன்று அவர் உயிருடன் இருந்திருந்தால் முகவரியின் வளர்ச்சியை பார்த்து சந்தோசப்பட்டிருப்பார். ஆனால் காலம் அவரை துர்மரணத்தில் கொண்டு சென்றுவிட்டது. என் அப்பாதான் என் Role Model.

இவர்களெல்லாம் இல்லை என்றால் என்னால் எதுவும் செய்திருக்க முடியாது. காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும் அது உலகத்தை விட பெரியது என்ற வள்ளுவத்தை முகவரி முழுவதும் உணர்ந்துள்ளது. முகவரிக்கு உதவும் எல்லா நல்ல உள்ளங்களுடன் எப்போதும் நன்றியுணர்வுடன் நல்ல தொடர்பில் இருப்போம் அதன் வெளிப்பாடே திணை அளவு உதவி செய்பவரையும் பனை அளவு போற்றும் முகவரியின் உன்னத நிலை. அதன் தொடர்ச்சியே 'Gratitude is Life' என்ற வாக்கியம் முகவரியின் லோகோவில் நிலைபெற்றதற்கான காரணம். இந்த நன்றியுணர்வை முகவரி தொடர்ந்து வளர உந்து சக்தியாக உள்ளது. எங்களுடைய இயல்பு நன்றியுணர்வுதான். அதே சமயத்தில் முகவரி ஃபவுண்டேஷன் தன் தனித்தன்மையுடன் ஒவ்வொரு செயலையும் செய்கிறது.

என்னுடைய ஆசை மனிதநேயத்தை உயிர்ப்போடு வைத்திருக்கும் நிறைய அதிகாரிகளை உருவாக்க வேண்டும் என்பதே. எனக்கு மிகவும் பிடித்த IAS அதிகாரி உதயசந்திரன் அவர்கள். அவர் ஈரோடு மாவட்ட ஆட்சியராக இருந்த போது பல மாணவர்கள் ஒரே இடத்தில் எளிய முறையில் வங்கிக்கடன் பெற ஏற்பாடு செய்திருந்தார். அதன் மூலம் பல ஏழை மாணவர்கள் உயர்கல்வி பெற்று வாழ்வில் வளமடைய வழி செய்தார். நாங்கள் இவ்வளவு நாள் போராடி செய்த செயலை அவரால் எளிதாக ஒரே நாளில் செய்ய முடிந்தது. அவரைப் போன்ற அர்ப்பணிப்புள்ள உதவும் எண்ணம் கொண்ட பல அதிகாரிகளை உருவாக்க வேண்டும் என்பதே என் அவா.

இந்த பதிப்பின் நோக்கம் நான் முன்பே கூறியபடி எங்களை நோக்கி வரும் தகுதியான தேவையுள்ள மாணவர்களுக்கு ஏதாவது ஒரு வழியில் உதவிட வேண்டும் என்பதே. இதுவரை நாங்கள் செய்தவற்றை உங்கள் முன் அத்தாட்சியாக வைக்கிறோம். முகவரி நேர்மையையும், வெளிப்படைத் தன்மையையும் இரு கண்களாக பாவித்து செயல்படுகிறது. என் மேல் உள்ள நம்பிக்கையில் 'முகவரி ரமேஷ்', 'முகவரி ரமேஷ்' என்று எல்லோரும் இப்பதிப்பில் கூறியுள்ளனர். எனக்கு கூச்சமாகத்தான் உள்ளது. பணியில் சேர்ந்த ஒருசில மாணவர்கள் என்மேல் உள்ள பாசத்தில் எனக்கான தேவைகளை பூர்த்திசெய்ய முன்வந்தனர். நான் அதனை நிராகரித்து முகவரியின் "வானவில்" திட்டத்தில் இணைந்து இனி வரும் முகவரி மாணவர்களுக்கு உதவி செய்யுமாறு கேட்டுக்கொண்டேன். காரணம் ரமேஷ் முக்கியமல்ல "முகவரியின்" வளர்ச்சி தான் முக்கியம்.

என் ஆசையெல்லாம் ரமேஷ் என்ற பெயர் அடிபட்டு முகவரி என்ற பெயர்தான் நிலைக்க வேண்டும். பல நல்ல உள்ளங்கள் இணைந்து Team Work–ஆக செயல்பட்டு பல மாணவர்களின் கனவுகளுக்கு வழிகாண வேண்டுமென்பதே. அதற்காகத்தான் இந்த முயற்சி. எங்கள் மாணவர்கள் மற்றும் முகவரிக்கு உதவும் நல்ல உள்ளங்களின் ஆசைப்படி என்னுடைய தேவைகளை என்னால் பூர்த்திசெய்து கொள்ள முடியும். அதற்கான முயற்சியிலும் நான் இருக்கிறேன்.

எங்கள் செயல்பாடுகளில் மனநிறைவு ஏற்பட்டால் உங்களின் உதவும் கரங்களை நீட்டுங்கள். மேலும் உங்களுக்கு தெரிந்த உதவும் உள்ளம் உடையவர்களிடம் இப்புத்தகத்தை சேர்த்தால் பல ஏழை மாணவர்களின் கனவுகளில் உங்கள் பங்கும் இருக்கட்டுமே... இருக்கும் என்ற ...

நம்பிக்கையுடன்...



'முகவரி' ரமேஷ்

25-09-2013

உண்டியலில் காசு போட்டுவிட்டான் என்பதற்காக கடவுள் ஒருவனைக் காப்பாற்றவும் மாட்டார்,
போடாததற்காக இன்னொருவனைத் தண்டிக்கவும் மாட்டார்!

- சத்குரு

# நெகிழ்வான தருணங்களில்...



மேயருடன் இரகுபதி குடும்பதினர்



மேயருடன் பூபதிராஜா குடும்பத்தினர்



மேயருடன் மருத்துவ மாணவர் தங்கதுரை



R. கிருஷ்ணமூர்த்தியுடன் ரகுபதி குடும்பத்தினர்



R.கிருஷ்ணமூர்த்தியுடன் பூபதிராஜா குடும்பத்தினர்

மனச்சோர்வு என்பது, உங்களுக்குள் இருந்துகொண்டே கீறிக் கிழித்து, உங்களை உபயோகமில்லாமல் அழித்துவிடும் ஒரு விஷ ஆயுதம்!

\- சத்குரு

ISHA FOUNDATION
15, Govindaswamy Naidu Layout, Singanallur, Coimbatore - 641 005 INDIA.
Tel: + 91 - 422 - 2582040, Telefax: + 91 - 422 - 2582080

## The Secret of Giving
### *-by Sadhguru*

Today we feel we must emphasize the importance of giving in the society only because taking is happening in large volumes and giving has become scarce. But in reality, giving and receiving is the basis of all transactions; Existence is happening in a constant give-and-take. Existentially, no interaction can take place without these two – they are always in equal proportion; one can never be more or less.

However, with a little deeper perception of life one can see that there is no such thing as giving and taking. It is just life rearranging itself constantly. If you see everything as yours, you just rearrange as necessary. In my experience, I have never felt I am giving or taking. I don't feel guilty about using anything, and I don't feel great about what I give.

When you realize that the essential process of life is a constant transaction, you will realize that for an iota of offering that you make, there are a trillion things to receive all the time. Think of the forces of Existence and the zillions of creatures working, knowingly or unknowingly, within your body and outside of it, to make life possible. Everything in the Existence is somehow collaborating to keep you alive and well. So, only a fool thinks of himself as a giver because just to be alive is to receive in great abundance.

For a spiritual seeker, developing an attitude of devotion is actually a trick to receive. Because when you are devout, you become receptive. If your energies are truly receptive, the Divine has to reach out. It has no choice. If your energies have really become an invitation to the divine, no one – not the guru, not God – can refuse you.

Gautama Buddha once said, "When you are hungry and you still give your food to somebody else, you become stronger. This is the eternal law." Medical Science would tell you otherwise – "You grab somebody's food and you eat well, you will be strong." The whole world says so and the medical science supports it. It is a fact in one level, but Gautama says, "When you are hungry, you give your food away to somebody else, you become stronger. This is the eternal law." This is so.

People only need to remember a simple fact: when you open your hands to give, your hands are also open to receive. Just the currency may be different. The receiving is guaranteed. To live is to give, there is really no choice. Will you give in time and will you give joyfully, is the question...